உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] ரௌத்திரி ஆண்டு ஆடித்திங்கள் 10—8—80 [இதழ் 9

மதுரைப் பொற்றாமரைக்குளத்தில்



ஸ்ரீ சொக்கநாதப்பெருமானைப் பெட்டகக்கோயிலுடன்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெறுதல்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

நீயே யொளித்திருப்பை
நீஎன்றும் காணுமல்
நீயே யொளித்தபடி
நின்னருளால் — நீயேதான்
காட்ட அனனியமாக்
கண்டேன் உனதுவிளை
யாட்டதென்ன சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 67

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணவடிவேல் முதலியார்.

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10—8—80 || இதழ் 9

உட்பொருள்

எண்		பக்கம்
1	அந்தநாள் வருமா? ...	385
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	389
3	வெண்ணிற மால்விடை அண்ணல்	394
4	சைவ சிகாமணி ...	398
5	கடிதம் ...	400
6	“கல்லூர்ப் பெருமணம் வேண்டா”	401
7	அபிராமி அந்தாதி ...	405
8	முனிமொழி ...	412
9	திருவன்னியூர், திருக்கருவிலிக் கொட்டிட்டை தலச் சிறப்பு ...	417
10	அன்னையருள்மாலை ...	423
11	செய்திகள் ...	424
12	எதிர்காலம் ...	428

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - ஆடி - 10—8—80 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

அந்த நாள் வருமா?

தற்சோதனை செய்வோம்!

நமது அன்னை பாரத நாடு, அன்னியவிலங்கொடித்து 1947 இல் வீரசுதந்திரம் பெற்றது. ஆண்டுகள் முப்பத்துமூன்று உருண்டோடி விட்டன. முப்பத்துநான்காவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்த நேரத்தில் நம்மைநாமே தற்சோதனைசெய்துகொள்வது நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். நமது நாட்டைச் சந்தையாகக் கொண்டு, தங்கள் உற்பத்திப்பொருட்களை இங்கே கொள்ளை இலாபத்திற்குவிற்று, அடக்குமுறைமூலம் நம்மை வருத்திய வெள்ளையர்களை வெளியேற்றிவிட்டோம். ஒரே பகையாக இருந்த அந்நியர் வெளியேறினர். என்றாலும் சுதந்திரத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா? அதன் பலன் இங்கே வாழும் கோடானுகோடிமக்களைச் சென்று அடைந்திருக்கிறதா? சுதந்திரத்தின் அர்த்தமும் இன்றியமையாமையும் நம்மால் சரிவரப் புரிந்துகொள்ளப்பெற்றிருக்கிறதா?

என்றெல்லாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ளும்போது அச்சம் நம் நெஞ்சில் நிறைகிறது. அவலம் நம்மை ஆட்கொள்ளுகிறது. அறியாமையின் கோர தாண்டவம் கண்முன் விரிகிறது.

கற்ருேம் : மறந்தோம் :

பாசிபடிந்தநீரை அகற்றிவிட்டுக் குளத்தில் தூயநீரைப் பாய்ச்ச வேண்டிய நாம் மீண்டும் சாக்கடையைப் பாய்ச்சுகின்ருேம். குப்பைகளை அகற்றித் தூய்மை செய்யப்பெற்ற இல்லத்தில் தீபமேற்றிக் குடிபுகாது, சேற்றை வாரியிறைத்து, சிறுநரிகளைக் குடியேற்றுகின்ருேம். ஒரே எதிரியாகிய வெள்ளையனை அகற்றினேம். ஆனுல், இன்று நமக்குள் நாமே அரசியல், சாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற அற்பக்காரணங்களின் அடிப்படையில் ஆயிரம் பகைகளை உண்டாக்கிக்கொண்டு அல்லலிலே நீந்துகின்ருேம்.

" யாதும் ஊரே ; யாவரும் கேளிர் "

என்ற மேடைகளில் பேசுகிருேம். வாழ்க்கையில் பகைக்கிருேம்.

" ஏழை என்றும் அடிமை என்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்போர்
இந்தியாவில் இல்லையே "

என்று பாடும்போது உணர்வு பூக்கக் கைகொட்டி மகிழ்கின்ருேம். உள்ளுக்குள் ஆயிரம் பேதம் பாராட்டிப் பெருந்துயரில் ஆழ்கிருேம்.

" பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு "

என்ற திருக்குறளை மறந்தோம். எத்தனை குழுக்கள் ! எவ்வளவு உட்பகைகள் ! அரசிற்கு எதிராக எத்தனை கிளர்ச்சிகள் ! கல்வியறிவு அற்ற மக்களுக்குச் சுதந்திரம் வழங்குதல் ஆபத்தானது என்ற வெள்ளையர்களின் வாக்கை உண்மையாக்கிவருகிருேம்.

சிந்திக்காது செய்துவருகிருேம் :

சுதந்திரம் ஒரு கூர்மையான வாள்போன்றது. கருவி மிகச் சிறந்தது என்பதில் சிறிதும் கருத்து வேறுபாடு இல்லை. கனிநறுக்கி உண்ணவும் பயன்படுத்தலாம். பிறர் கழுத்தறுக்கவும் பயன்படுத்தலாம். ஆனுல் தெரிந்தோ தெரியாமலோ சுதந்திரம் என்பது எதை வேண்டுமானுலும் பேசி, எதைவேண்டுமானுலும் செய்து, யாருக்கும் கட்டுப்படாது வாழ்வது என்று நம்மில் பலரால் பொருள்கொள்ளப்

பட்டிருக்கிறது. வாளால் பகை முடிக்கவும் தெரியாது, பழம் நறுக்கவும் அறியாது, நம் கழுத்தையே நாம் அறுத்துக்கொள்ளும் அறியாமையையே தொடர்ந்து செய்துவந்திருக்கிறோம். செய்தும்வருகிறோம். இந்த அறியாமைக்கு உரிய பெரிய தண்டனை ஒன்றை நாம் ஒருநாள் எதிர்கொண்டேயாகவேண்டும். பொதுவுடைமைகளை அழிப்பது; அரசியலின்பெயரால் அராஜகம் நிகழ்த்துவது, தன்னல நோக்கில் எளியாரை வலியார் சுரண்டுவது; எரியும் வீட்டில் இழுத்தவரை இலாபம் என எண்ணி, மக்களைப் பிரித்தாண்டு தன்னைவலுப்படுத்திக் கொள்வது; இவையே இன்றைய சுதந்திர நாட்டில் நம்மில் பலரது வாழ்வாக உள்ள அவலத்தை, இல்லை என்று மறுக்க நமக்குத் துணிவு இல்லை.

அவலத்தை நினைவு கூர்கிறோம்:

ஜனநாயக நாட்டில், உரிமைகளுக்காகப் போராடுவது சட்டபூர்வ உரிமை. போராட்டமும், கதவடைப்பும், வேலை நிறுத்தமும் கடைசி ஆயுதங்கள் என்ற உணர்வே நம்மிடம் இல்லை. கேட்ட ஒரு புடவையைக் கணவன் வாங்கித்தரவில்லை என்ற கோபத்தில், மார்பில் சுரக்கும் பாலைக் குழந்தைக்கு வழங்க மறுக்கும் தாய்போல, மனநோய் தீர்க்கும் கடமை மிக்க ஆசிரியர்கள், உடல்நோய் தீர்க்கும் கடமைமிக்க மருத்துவர்கள், தீயோரிடமிருந்து நல்லோர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய காவலர்கள் போன்றோரும் நடந்துகொள்ளும் அவலத்தை நினைவுகூராது இருக்க இயலவில்லை. ஆயிரம் நியாயமான காரணங்கள் இருக்கட்டுமே! அதற்காக யார் என்ன முறைகளைக் கையாள்வது என்ற வரையறை கூடவா இல்லாது போயிற்று இவைதாம் சுதந்திரம் என்றால் இந்தச் சுதந்திரத்தை எப்படி நெஞ்சார வரவேற்க இயலும்?

இழப்போம் என எச்சரிக்கிறோம்:

ஜனநாயகத்தில் மக்கள் கையில் உள்ள வாக்குச் சீட்டுகளின் மதிப்பு மிகப்பெரியது. அந்த உண்மை இந்த நாட்டுமக்களால் சரிவர உணரப்படவில்லை என்பதை நம்மில் பலரும் அறிவோம். அந்த வாக்குகளைப் பெற அரசியல் கட்சிகள் செய்யும் தர்ம - நியாயங்களுக்கு உட்படாத செயல்களைப் பட்டியலிட்டால் அதற்கு முடிவே யிராது. 'காக்கை கறுப்பு' என்பது பொது உண்மை. இதை ஒரு கட்சிக்காரர்கள் சொன்னால், இன்னொரு கட்சிக்காரர்கள் 'வெள்ளை' என்றே சாதிப்பார்கள். அதையும் நம்மில் பலர் நம்பத் தயாராக இருக்கும் வரை இந்த வியாபாரம் அவர்களுக்கு நன்றாகவே இலாபம் தந்து வரும். சுய சிந்தனையற்ற இந்தநிலை தொடர்ந்து நீடிக்குமானால் பெற்ற சுதந்திரத்தை மிக விரைவில் நாம் இழக்க நேரிடும் என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும்.

அந்த நாள் வரப் பிரார்த்திக்கிறோம் :

விடுதலை பெற்ற இருபத்தைந்து ஆண்டுகளில் பெரிய முன்னேற்றம் கண்ட ரஷ்யநாடு; பேரழிவிற்குப் பின்னும் மகத்தான வளர்ச்சி கண்ட ஜப்பான் நாடு போன்றவற்றின் வளர்ச்சிக்காரணங்களை நாம் ஆராயவேண்டும். சுதந்திரம் என்பது நியமிப்பார் இன்றிச் சோம்பித்திரிவதல்ல; ஓர் எல்லைக்குள் நின்று உழைத்து உயர்வது என்ற படிப்பினையை இந்த நாடுகளிடமிருந்து நாம் பெற்றாகவேண்டும். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உணர்வு பெருக வேண்டும். ஆரவாரப் பேச்சுக்களை விடுத்து அனைவரும் உழைப்புக்குத் தலைவணங்கவேண்டும். அற்பக்காரணங்களுக்காக முரண்படும் போக்கு நீங்கவேண்டும். கல்வியும், உழைப்பும், நேர்மையும், தன்னலமற்ற மனப்பாங்கும் உருவாகும் நாளே உண்மையான விடுதலை பெற்ற திருநாள். அந்த நல்ல நாள் வரப் பிரார்த்திப்போம்.

பொறுப்புடன் பொதிந்த சுதந்திரம் வாழ்க
புண்ணிய பாரதம் புகழுடன் வளர்க

அட்டைப்பட விளக்கம்

மதுரையும் தருமையும்

தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆலவாய் அண்ணல் அருளியபடி மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி எழுகின்றபோது சொக்கநாதப்பெருமான் சிவலிங்க வடிவில் பெட்டகக்கோயிலொடும் தம்கரத்தில் கண்ணுக்கு இனிய பொருளாக எழுந்தருளிய திருவருட்டிறத்தை எண்ணி வியந்தார்கள். பெருமான் ஆணைப்படி கமலை ஞானப்பிரகாசரிடம் ஞானதீட்சையும் பூசிக்கும் முறைமையும் பெற்றார்கள்; குரு ஆணைக்கிணங்க தருமபுரத்திற்கு வந்தார்கள்; நாள்தோறும் சொக்கநாதப்பெருமானைப் பூசித்துக்கொண்டு, தம்மிடம்வரும் பக்குவிகளுக்கு ஞானோபதேசம் செய்தருளினார்கள். அவர்கள் அன்று பூசித்துவந்த சொக்கநாதப் பெருமானே, இன்றுவரை அவர்கள்வழிவழிவருகின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களுக்கு ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாக விளங்கி அருள்பாலித்து வருகிறார். சொக்கநாதப்பெருமான் மணிவாசகருக்காகக் குதிரைச் சேவகனாகியும், வந்தியின் கூலியாளாகி, பிட்டுண்டு, மண்சுமந்து, பிரம்படி ஏற்றும் அருள்பாலித்த திருவிழா ஆவணி மூலத்திருவிழா. அந்த ஆவணிமூலப்பெருவிழா மதுரையில்நிகழ்வது போலத் தருமையிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. அவ்விழாவை நினைவுபடுத்தும் வகையில் இவ்விதழின் அட்டைப்படம் காட்சிதருகிறது.

உ

குருபரிகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனத் திருமடத்தில் நடைபெற்ற
விஸ்வ ஹிந்து பரிஷத்தின் ஐந்துநாள் முகாமில் தொடக்கநாளன்று
21—5—1980

வழங்கியருளிய

ஆசியுரை

"நிலைமை சொல்லு; நெஞ்சே! தவம் என்செய்தாய்?
கலைகளாயவல்லான்; கயிலாய நன்
மலையன்; மாமயிலாடுதுறையன்; நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே."

'விஸ்வ ஹிந்து பரிஷத்' எனும் இவ்வியக்கம் இன்று முதல் ஐந்து நாட்கள் தருமபுரத்தில் முகாமிட்டுப் பல நற்பணிகளைச் செய்ய இருக்கிறது. இப்பொழுதிருக்கும் கால நிலையில் இதுபோன்ற இயக்கங்கள் பல இடங்களிலும் கூடி நல்ல பல காரியங்களைச் செய்வது மிகத்தேவையாக உள்ளது. இதனை ஒட்டி இங்கே சில கருத்துக்களைச் சிந்திப்போம்.

பெருமையும் சிறுமையும் பின்பற்றுவோரால் :

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய நூற்பா. எல்லாச் சொற்களும் பொருளை யுணர்த்துவனவே என்பது இதன் பொருளாகும். அதேபோல நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களும் உயிர்களுக்கு, அதிலும் சிறப்பாக மக்களுக்கு நன்மை செய்யவே தோன்றின இருப்பினும், அவை அனைத்தும், தோன்றிய நன்னோக்கத்தில் அந்தந்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் செயல்படாமையால் அவ்வவற்றிற்கும் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. சட்டம் நன்மையைச் செய்யத்தான் தோன்றியது என்றாலும் அதனைச் செயல்படுத்துபவர்களின் குறையினால் அந்தச் சட்டத்திற்கே குறைவு

ஏற்பட்டுவிடுகிறது. மழைநீர் எவ்வளவுதான் தூய்மையுடையதாக இருந்தாலும் அது சாரும் இடத்தின் குறைவினுல் அதுவும் தன் தரத்தினை இழந்துவிடுதலைப்போல, சட்டமும் சமயமும் சார்ந்தவர்களின் குறையினுல் மதிப்பிழந்து விடுகிறது. இந்த அடிப்படையில், கடந்த காலங்களில் நிகழ்ந்த சில வரலாறுகளைச் சிந்திப்போம்.

கிறித்தவர் - இஸ்லாமியோர்களின் காழ்ப்பு :

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்ட காலத்தில் சென்னையில் மயிலாப்பூரிலிருந்த கபாலீசுவரர் திருக்கோயில் வெள்ளையர்களால் இடிக்கப்பட்டுவிட்டது இது வரலாறு அறிந்த உண்மை. இப்பொழுதிருக்கும் கபாலீசுவரர்கோயில் புதிதாகக் கட்டப்பெற்றதாகும்.

1800 ஆண்டுகட்கு முன்பு ஞானசம்பந்தர், 'மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை' எனும் பதிகம்பாடி எலும்பைப் பெண்ணாக்கிய வரலாற்றினைக்கொண்ட அற்புதத்திருக்கோயில் இடிக்கப்பட்டுவிட்டது. பழைய கபாலீசுவரர்திருக்கோயில் இருந்த இடத்தில்தான் இப்பொழுது 'சாந்தோம் சர்ச்' இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு ஆதாரமாக அங்கே சில நந்திகள் காணப்படுகின்றன இதனைக் காணும்பொழுது வெள்ளையர்களின் மதக்காழ்ப்பும் அதன் அடிப்படையில் நிகழ்ந்த இந்தச் செயல்களும் அவர்கள் சார்ந்துள்ள கிறித்தவ மதத்தைத் தாழ்த்திவிட்டது என்றே எண்ணவேண்டியுள்ளது.

மேலும் வெள்ளையர்களால் சென்னை மல்லீசர் திருக்கோயிலும் சென்னை கேசவப்பெருமாள் திருக்கோயிலும் இடிக்கப்பட்டுவிட்டன. இப்பொழுதிருக்கும் சென்னை மல்லீசர்கோயில் துவிபாஷாவல்லுனர் சீனிவாச முதலியார் என்பவரால் வெள்ளையரிடமே பொருளுதவி பெற்றுப் புதிதாகக் கட்டப்பெற்றது என்று கூறுவர். இதேபோன்று பிரெஞ்சு ஆட்சியில் 1720 இல் டூப்ளே என்பான் ஆண்டுவந்த பொழுது பாண்டிச்சேரியில் ஒருசம்பவம் நிகழ்ந்தது. கிறித்தவர்கள் அங்கிருந்த வேதபுரீசுவரர் திருக்கோயிலையும் வேதநாராயணப் பெருமாள் திருக்கோயிலையும் இடித்துத்தள்ளிவிட்டார்கள். இப்பொழுது அந்த இடத்தில் சர்ச் கட்டப்பட்டுள்ளது. இடித்துத் தள்ளப்பட்ட அவ்விருகோயிலும் அப்பெயரால் வேறிடத்தில் அதாவது இப்போது மகாத்மாகாந்திரோடு என வழங்கும் சாலையில் கட்டப்பட்டுள்ளது. மேலும் முகலாயர்கள் ஆட்சியில் வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயம், ஜோதிர்லிங்கத் தலங்களுள் சோமநாதர் ஆலயம் முதலியன தகர்க்கப்பட்டன. வேலூர், மூர்த்தியில்லாக்கோயிலாகவே இன்றும் காட்சிதருகிறது. சுதந்திர இந்தியாவின் துணைப்பிரதமராக விளங்கிய இரும்புமனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களால் சோமநாதர் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முகமதியர்களைப் பாருங்கள் !

அந்தக்காலத்தில் மிகப் பிரபலமானவரும் துபாஷ் (இருமொழி அறிந்தவர்) எனும் தகுதியில் இருந்தவரும் மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்தவருமான புதுவை ஆனந்தரங்கம்பிள்ளைபோன்றோர் இச்செயல்களைக் கண்டிக்காமல் இருந்துவிட்டார்கள். இங்ஙனம் சமயத்திற்கும் சமயச்சின்னங்களுக்கும் (திருக்கோயிலுக்கும்) ஊறு ஏற்படும் பொழுதெல்லாம் வியாபகமாய் உள்ளவர்களும் பக்தர்களும் பொதுமக்களும் வாய்மூடி மௌனிகளாய் இருந்துவிடுவது மன்னிக்கமுடியாத குற்றமாகும். இங்கே இன்னொன்றும் நினைவுபடுத்துதல் தக்கதாகும். அதே காலத்தில் புதுவையில் முகமதியர்களின் மசூதி ஒன்றினை இடிக்கச் சென்றபொழுது அங்கிருந்த முகமதியர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எங்களின் தலைகள் இந்த மண்ணிலே உருண்டபின்னர் எங்கள் பிணத்தின்மீது நடந்துசென்றுதான் மசூதியினை இடிக்கவேண்டும் என்று வீராவேசத்துடன் போர்க்கொடி காட்டினார்கள். அதனால் அந்த மசூதி இடிக்கப்படவில்லை என்றும் வரலாறு கூறுகிறது.

அவரவர் கடமையைச் செய்க !

நன்றாக வேரூன்றி ஆல்போல் தழைத்துள்ள இந்து சமயம் பக்தி உறைப்பும் தியாகமனமும் உள்ளவர்கள் இல்லாமையால் வரவரச் செல்வாக்குக் குறைந்துவருகின்றது. எதிரிகளால்தான் அழிகிறது என்று எண்ணும் எண்ணத்தை விட்டுவிட்டு நம்மீதுதான் குறை இருக்கின்றது என்பதை உணர்ந்தால் பயன் விளையும். எந்தச் சமயத்திற்கும் தன் கருத்துக்களைத் தெளிவு படுத்தவும் பரப்பவும் உரிமை இருக்கிறது. அதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அச்சமயத்தின் சார்பாளர்கள் நம் சமயத்தில் கைவைக்கவோ வேறு பல குறைபாடுகளைச் செய்யவோ நாம் விட்டுவிடுதல் கூடாது. அங்ஙனம் விட்டுவிடுவோமேயானால் பிற்காலத்தில்வரும் சந்ததியினரின் இழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டிவரும். எனவே பிறர் சமயத்தில் தலையிடாமலும், பிறர் நம் சமயத்தில் கைவைக்க இடம் தராமலும் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது சமயச் சார்புடையோர் ஒவ்வொருவரது கடமையாகும்.

நிலைமை சொல்லு நெஞ்சே !

இன்றைக்கு மக்களிடையே சமயம் நல்லமுறையில் விளக்கம் பெறாமலும், அவர்களின் உயிரைவிட மேலாகச் சமயத்தை எண்ணும் எண்ணம் வராமலும் இருப்பதற்குக் காரணம் சரியான முறையில் சமயம் பரப்பப் படாமலிருப்பதே ஆகும். இன்று பலரின் கூற்றுக் களாக நாம் கேட்பதெல்லாம் 'நம் சமயம் மக்களிடையே வளர

வில்லை' என்பதே. வளரவில்லை வளரவில்லை என்று கூறிக்கொண்டிருக்கும் ஆதங்கம்மட்டும் போதாது. அங்ஙனம் சமயம் வளர நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ற கேள்வியினை ஒவ்வொரு பக்தனும் தன்னை நோக்கிக் கேட்டுக் கொள்வானேயானால் பலன் விளையும். உழைக்காமலேயே செல்வம் சேர்வதோ, நல்ல நூல்களைப் பயிலாமலேயே அறிவு வளர்வதோ தவம் செய்யாமலேயே ஞானம் பிறப்பதோ எப்போதும் இல்லை. அதேபோலத் தொண்டுசெய்யாமலேயே சமயத்தை மக்கள் உள்ளத்தில் மலரச் செய்ய முடியாது.

அப்பர் கூறும் அரியவழி :

இன்றிருக்கும் நிலைக்குப் பொருத்தமாக அப்பர் சுவாமிகள் அன்றே பாடிய, 'நிலைமை சொல்லு நெஞ்சே' எனும் பாடலைத்தான் முதலில் குறிப்பிட்டோம் அதன் பொருளை நினைவுகூர்வோம்.

நெஞ்சே கலைகள் பலவற்றையும் உடையவனும் கயிலாயமலையிலுள்ளவனும் ஆகிய சிவபெருமான் மயிலாடுதுறையிலும் உறைகின்றான் அவன் நம் தலையின்மேலும் மனத்துள்ளும்வந்து தங்குவதற்கு நீ என்ன தவம் செய்தாய்? அந்த நிலைமையைச் சொல்லு என்று கேட்கின்றார் நாவுக்கரசர்.

இக்கேள்வியைத்தான் நாம் இப்பொழுது கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. ஆதலின் தவம் செய்தாலொழிய எங்கணும் பரந்திருக்கும் ஆண்டவன் சிரத்திலும் மனத்துளும் வந்து தங்கான் என்பது உறுதியாகத் தெளிவாகின்றது.

தவம் என்பது வள்ளுவர் கூறுவதுபோலத் தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வதும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகும் அத்தவத்தினை இன்று நம்மில் பலரும் செய்யத்தவறியதே இன்றிருக்கும் அவலநிலைமைக்குக் காரணமாகும்.

பரமேசுவரன் கரவாடும் வன்னெஞ்சர்க்குக் கரந்தும், கரவாத நன்னெஞ்சர்க்கு விரவிப் பரந்தும் இருப்பவன் அவன் உன் வாழ்வில் விளங்கித் தோன்ற வேண்டுமானால் முதலில் நீ உன் நிலையை உணர்ந்துகொள்ளல்வேண்டும். பிறகு எங்கும் பரந்திருக்கும் ஆண்டவனை நெஞ்சிலும் சிரத்திலும் நிறுத்த முயற்சி எடுத்துக் கொள்ளல்வேண்டும். இவ்விரண்டுமே நாம் செய்யத்தக்கனவாம்.

இயக்கம் கண்டு இணைந்து வளர்வோம் :

நம் நெஞ்சிலும் சிரத்திலும் ஆண்டவனை நீங்காது பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் அதே சமயத்தில் நம்முடைய சமயத்தை மக்களின் நெஞ்சிலும் சிரத்திலும் வைத்துப் போற்றிடப் பாடுபடுதல் நமது தலையாய கடமை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல் படுதல் இன்றியமையாததாகும். பிறருக்குத் தீங்கிழைக்காமலேயே தொண்டு செய்ய ஒருமித்த ஓர் இயக்கம் தேவை. இக்கருத்தில் இந்த 'விஸ்வ ஹிந்து பரிஷத்' நல்ல பல காரியங்களைச் செய்துவருகிறது. இவர்கள் உயர்வு தாழ்வு பாராட்டாமல் தொண்டாற்றுகின்றனர். ஒருங்கு கூடும்பொழுது கட்டுப்பாடும் ஒழுங்கும் இவர்களிடையே காணப்படுகின்றன. ஓரியக்கத்திற்கு இவை மிகவும் தேவை இந்து சமயத்திலிருந்து பல்வேறு காரணங்களால் பிரிந்து சென்றவர்களும் இப்பொழுது தாய்ச்சமயத்திற்கு வரவேண்டும்என்று விரும்புகிறார்கள். அவர்களை இந்து சமயத்திற்குக் கொண்டுவருவதற்கு இவ்வியக்கம் பெருமுயற்சிசெய்து சில இடங்களில் பெரும்பலனும் பெற்றிருக்கிறது. 'விஸ்வம்' என்ற சொல்லே பெரியது எனும் பொருள் தரக்கூடிய சொல்லாகும். 'விஸ்வரூப தரிசனம்' என்றால் பேருருவ வழிபாடு என்பது பொருளாகும். விஸ்வநாதர் என்பதும் இக்கருத்துப் பற்றியதேயாம். 'விஸ்வஹிந்து பரிஷத்' பெரிய இயக்கமாகவளர்ந்து உலகம் முழுமையும் சென்று அயராது தொண்டுசெய்து சிறப்புப் பெறும் என்று நம்பிக்கை கொள்வோமாக. நமது தொண்டு நமது திருக்கோயில்களை மையமாகவைத்தே செயல்படவேண்டும். அப்போதுதான் திருக்கோயில்களும் திருவருட்பொலிவோடு திகழும். நமது தொண்டும் பெரும்பயன் தரும். இதனை விஸ்வ ஹிந்து பரிஷத்தினர் நடைமுறைப்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். உலகம் முழுமையும் இந்துசமயம் பரவித் தழைத்து வளர இவ்வியக்கத்தைச் சார்ந்தோரும் பக்தர்களும் இடையறாது தொண்டு பல செய்து தம்மையும் உயர்த்தித் தம் சமயத்தையும் உயர்த்தித் தாய்நாட்டையும் உயர்த்தப் பாடுபடுவார்களாக!

இன்று கூடியிருக்கும் பக்தர்களும் தொண்டர்களும் நலம் பல பெற்று நீடு வாழவும் இவ்வியக்கம் தொண்டுசெய்யும் நோக்கில் வெற்றிபெறவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வளர்க இந்துமதம்.

வாழ்க உலகெலாம்.

வெண்ணிற மால்விடை அண்ணல்

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

சிவபெருமானுடைய திருவுருவத்தை எப்படியெல்லாம் வருணிக்கிறார் திருஞானசம்பந்தர்! அந்தப்பெருமானுடைய திருமார்பைப் பார்க்கிறார். அங்கே அவன் கொன்றைமாலையைப் புனைந்திருக்கிறான். தேவர்கள் அணிந்த பூவில் வண்டு மொய்க்காது. ஆனால் இறைவன் கருணையினால் கொன்றையலங்கலில் வண்டு சூழ்ந்து அங்குள்ள தாதை ஊதித் தேனை உண்ணப்பண்ணுகிறான்.

" சூழ்த்தமது கரம் முரலும் தாரோயை "

என்று மாணிக்கவாசகர் பாடுவார். வண்டுகள் மிகவும் உவகையுடன் கொன்றைமாலையை மொய்த்து ரீங்காரம் செய்கின்றன. அவை முரலும் ஒலி பண்ணை இசைப்பதைப்போல இருக்கிறது.

பண் உறு வண்டுஅறை கொன்றை......... மார்பினர்.

அந்தத் திருமார்பை உற்றுக் கவனிக்கிறார். அங்கே பாலைப்போன்ற திருநீற்றை இறைவன் பூசிக்கொண்டிருக்கிறான்.

பால்புரை நீறு......... மார்பினர்.

அங்கே திருநீற்றுக்கிடையே இறைவன் முப்புரிநூலை அணிந்திருக்கிறான். அவன் அநாதி அந்தணன் அல்லவா ?

" வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு "

என்று பிறிதோரிடத்தில் சம்பந்தர் பாடுவார்.

" வெண்ணூல் கிடந்த...... மார்பினர் "

அந்தத் திருமார்பில் ஒட்டி இணைந்து வாழ்கிறாள் உமாதேவி. அவளை என்றும் பிரியாமல் ஒருபாதியில் வைத்தவன் அவன். அவன் திருமார்பைப் பார்த்தால் பெண்ணின் பாகம் தெளிவாகத் தெரிகிறது.

பெண் உறு மார்பினர்.

திரிபுரங்களுக்குத் தலைவர்களாக இருந்து. தேவருக்கும் பூவுலகில் உள்ள மக்களுக்கும் இடுக்கண்களை உண்டாக்கினவர்கள் மூன்று அசுரர்கள். பறக்கும் கோட்டைகளாகிய அவற்றைத் திடீரென்று ஓரிடத்தில் படியச்செய்வார்கள். அவற்றின் கீழ் அகப்பட்டவர்கள் யாவரும் நசுங்கி மாய்ந்துபோவார்கள்.

இதனை அறிந்த எம்பெருமான், பகைவர்களாக இருந்த அவர்களுடைய வலிமையைக் குறைக்க எண்ணினன். அவர்களுக்குப் பலமாக இருந்த மூன்று புரங்களையும் அழித்தான். குழந்தை கத்தியைத் தன் கையில் வைத்துக்கொண்டு பிறரைக் குத்தவரும்போது அதன் கையிலுள்ள கத்தியைப் பிடுங்கிக்கொள்ளும் தாயைப்போலப் புரங்களைமட்டும் அழித்தான். அந்த மூன்று அசுரர்களையும் அழிக்கவில்லை, அவர்கள் திருந்தி இறைவனுடைய வாயில்காவலர்களாகவும் குடமுழா வாசிப்பவனுகவும் ஆனுர்கள். எவரையும் திருத்திப் பணிகொள்கிறவன் ஆண்டவன் என்பதை இதனுல் புலப்படுத்தினன். அவர்களுடைய மதிலைச் சிரித்து எரித்தான் என்றும், விழித்து எரித்தானென்றும், அம்பைவிட்டு எரித்தா என்றும் பலவகையில் அருளாளர்கள் பாடியிருக்கிருர்கள். இந்த வேறுபாட்டைக் கல்பபேதம் என்று சொல்வது மரபு. அதாவது ஒவ்வொரு கல்பத்திலும் திரிபுரசங்காரம் நடக்கிறதாம் ஒருகல்பத்தில் இறைவன் அம்பை எய்து திரிபுரங்களை அழித்தானும்.

பேணர் மும்மதில் எய்த பெருமான்

மூன்று புரங்களை அழித்து அவற்றில் இருந்த அசுரர்களை ஆட்கொண்டது, ஓர் உள்ளுறையை உடையது. ஆன்மா பாசத்தில் சிக்கித் துன்புற்றுப் பிறப்பையும் இறப்பையும் தொடர்ந்து அடைந்து வருகிறது. பாசம் மும்மலங்கள் அடங்கியது; ஆணவம், கன்மம், மாயை என்பவை அவை. ஆன்மாவைப் பிணித்திருக்கும் கட்டாகிய அவற்றை இறைவன் அழித்து அதை உய்யக்கொள்வான் இதையே திரிபுரசங்காரம் காட்டுகின்றது.

"முப்புரம் என்பது மும்மல காரியம்"

என்பார் திருமூலர்.

எல்லாத் தேவர்களும் முகத்தில் இரண்டு கண் உடையவர்கள். இறைவன் அவர்களுக்கெல்லாம் இல்லாத ஞானக் கண்ணைத் தன் திருநுதலில் பெற்றவன். அது நடுநிலையில் நின்று நோக்கும்.

கண்ணுறு நெற்றி கலந்த

அவன் தன் சடைமுடியில் திங்களைக் கண்ணியைப்போலச் சூடியிருக்கிருன். சந்திரன் வானத்தில் இருந்தால் தேய்வும் மாய்வும் வளர்ச்சியும் மாறிமாறி அடையும். இறைவன் திருமுடியில் உள்ள திங்கள் என்றும் மாருமல் ஒருநிலையிலே இருக்கும். இறைவனைச்

சார்ந்தவர்கள் தேய்வும் மாய்வும் இன்றி நிச்சலனமாக ஒரே நிலையில் இருப்பார்கள் என்பதை அந்தத்திங்கள் காட்டிக்கொண்டு விளங்குகிறது.

வெண் திங்கட் கண்ணியர்

கண்ணி என்பது தலையில் அணியும் குறுமாலை, வெண்ணிறம் பெற்ற திங்கள், இறைவன் திருமுடியில் குறுங்கண்ணியைப் போல ஒளிர்கிறது.

தேவர்களுக்கெல்லாம் வாழ்வு தந்து அவர்களைத் தன் ஆணை வழியே தம்கடமைகளை ஆற்றச் செய்கிறவன் சிவபெருமான், அவர்கள் தம்பதவி நிலைப்பதற்காக அவனை என்றும் கைதொழுது ஏத்துகிறார்கள்.

விண்ணவர் கைதொழுது ஏத்தும்

தம்முடைய பதவி பறிபோகாமல் இருப்பதை எண்ணித் தேவர்கள் தொழுகிறார்கள்; புகழ்கிறார்கள்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்"

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

சிவபெருமான் இடபவாகனத்தை உடையவன். அந்த இடபம் தருமம். தருமத்தை இறைவன் தாங்கிப் பாதுகாக்கிறான். அதை எண்ணி நன்றியறிவோடு வெண்ணிறமும் பெருமையும் உடைய இடபமாகத் தருமமே இருந்து அவனைத் தாங்குகிறது.

வெண்ணிற மால்விடை அண்ணல்

திருமாலே ஒருசமயம் இறைவனை இடபமாகத் தாங்கினான். தன் நீல நிறத்தை மாற்றிக்கொண்டு தூய சத்துவகுணத்தின் வண்ணமாகிய வெள்ளை நிறம் பெற்ற இடபமாகத் திருமால் தாங்கும் தலைவன் என்னும் பொருள் கொள்ளலாம். இறைவனைத் தாங்குவதற்குத் தனித் தகுதி வேண்டும் அந்தத் தகுதியாகிய சத்துவகுணத்தைப் பெற்று அவன் இறைவனைத் தாங்குகிறான் இறைவனைத் தாங்கினால் தனக்கு நலம் உண்டாகும் என்று எண்ணிப் பெருமையை உடைய அவனுக்கு வாகனமாக நின்று அவனைத் தன்மேல் எழுந்தருளச் செய்கிறான்.

இத்தகைய பெருமானைச் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள திருவேட்களத்தில் தரிசித்த போது ஞானசம்பந்தப் பெருமான் இவற்றையெல்லாம் எண்ணிப் பாடுகிறார்.

பண்உறு வண்டுஅறை கொன்றை அலங்கல்
பால்புரை நீறுவெண் ணூல்கிடந்த
பெண்உறு மார்பினர், பேணார்
மும்மதில் எய்த பெருமான்
கண்உறு நெற்றி கலந்தவெண் திங்கட்
கண்ணியர், விண்ணவர் கைதொழுது ஏத்தும்
வெண்ணிற மால்விடை அண்ணல்,
வேட்கள நன்னக ராரே.

திருவேட்களம் என்னும் நல்ல நகரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானால், பண்களைப் பாடும் வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மாலையையும், பாலை ஒத்த வெண்மையான திருநீற்றையும், வெண்ணூல் கிடந்த இயல்பையும் கொண்டதும், உமாதேவி நெருங்கி இணைந்ததுமாகிய திருமார்பை உடையவர்; பகைவர்களாகிய மூவருடைய மூன்று மதில்களையும் எய்த பெருமான்; ஞானக்கண் பொருந்திய நெற்றியையும், பொருந்திய வெண்மையான திங்களாகிய குறுங்கண்ணியையும் உடையவர்; தேவர்கள் கையினால் தொழுது துதிப்பவரும், வெண்ணிறமும் பெருமையும் உடைய இடபத்தில் ஏறுபவரும் ஆகிய பெருமையை உடையவர்.

[பண் - இராகம், அறை - முரலும்; நன்றாகக் காதில் விழும்படி முரல்வதனால் அறை என்றார். கொன்றையலங்கல் மார்பினர், நீறு கிடந்த மார்பினர், வெண்ணூல் கிடந்த மார்பினர், பெண்ணுறு மார்பினர், என்று கூட்டிப் பொருள்செய்க. பெண்ணுறு மார்பினர் என்பது அனைத்தும் ஒருபெயராய் நின்று கிடந்த என்ற எச்சத்துக்கு முடிபாக அமைந்தது. கொன்றையலங்கல் முதலியன பெண்ணுக்கு அடைகள் அல்ல. பெண் - உமாதேவி, பேணார் - பகைவர், மும் மதில்- திரிபுரங்கள். கண்ணுறு நெற்றியை உடையவர், கலந்த வெண்திங்கட் கண்ணியை உடையவர். கலந்த வெண்திங்கட் கண்ணியர் என்பது அனைத்தும் ஒருபெயராய் நிற்க, நெற்றி யென்பது அதைக் கொண்டு முடிந்தது, விண்ணவர் முதலில் கையினால் தொழுது, பிறகு ஏத்தினார்கள். வெண்ணிறமும் பெருமையையும் உடைய விடை; மால் - பெருமை, மாலாகிய விடைஎன்பதும் ஒன்று. அண்ணல் - பெருமையை உடையவர், வேட்கள நன்னகரார் - திருவேட்களமாகிய நல்ல நகரத்தில் நித்திய வாசம் செய்பவர்; நகர் - கோயிலுமாம், மார்பை நோக்கிப் பிறகு நெற்றியைப் பார்த்து, அப்பால் திருமுடியைக் கண்டு பாடுகிறார் சம்பந்தர்.]

முதல்திருமுறையில் உள்ள திருவேட்களத் திருப்பதிகத்தில் ஐந்தாவது திருப்பாடலாக அமைந்தது இது.

சைவ சிகாமணி*

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், தமிழாகரர், பேராசிரியர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

பாலறுவாயர் காட்டிய பதிகப் பெருவழி :

சைவ நெறிக்குத் தலைவராக விளங்குபவர் திருஞானசம்பந்தர் ஆவர். ஆளுடையபிள்ளையாராக விளங்கும் பாலறுவாயரின் திருப் பாட்டுக்களையே **பன்னிரு திருமுறைகளில் முதற்கண் வைத்துப் போற்றியுள்ள சான்றோர் அடிப்படைக் கருத்து** இதுவேயாகும். திருஞானசம்பந்தர் தமிழ்கூறு நல்உலகிற்கு உய்வுநெறி காட்டிய அருளாளர். அவர் காட்டிய திருநெறியை, நம்பியாண்டார்நம்பிகள்.

'பதிகப் பெருவழி''

என்று குறிப்பது பெரிதும் பொருந்துவதாகும். 1 இத்துடன் அமைதி கொள்ளாத நம்பிகள் வேறொரு திருப்பாட்டில் இதனையே பின்னும் விளக்குவாராக,

"ஆறதேறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு
வீறதேறும் தமிழால் வழிகண்டவன்'' 2

என்றும் பாடியுள்ளனர். '**தமிழால் இறை அருள் பெறும் வழி கண்டவன்**' என்பது நம்பிகள் திருவுள்ளம். சடைக்கண் கங்கையை வைத்த அருளாளன் ஆகிய சிவபிரான் கருணைக்கு இலக்கியமாக விளங்கும் பேருளாளன் உலக அழிவிற்குக் காரணமாக வானின்றும் இழிந்த கங்கைப் பெருக்கைத் தன் சடைக்கண் தாங்கிக்காத்த சிவ பிரானின் அருள்பெற்ற பாலறுவாயரும், சமண பௌத்தங்களின்

---

* தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில். 5—6—80 அன்று திருமுறைப் பேரவையில் வெளியிட்ட கருத்துக் களைத் தழுவிய கட்டுரை

1 ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி பா. 2.

2 ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் பா. 5.

செல்வாக்குப் பெருக்கினல் சைவ சமயத் திருநெறிக்கு ஏற்பட இருந்த பேரழிவைத் தம் இனிய செந்தமிழ்ப் பாடற் பெருக்கினல் தடுத்துக் காத்த தண்ணளி உடையவர். இந்தக் குறிப்பு அழகு, நம்பிகளின் இத் தொடரில் சிந்திக்கத் தோன்றும் சிறப்புடையதாகும்.

சைவசிகாமணி :

இவ்வாறு தமிழால் வழிகண்டு உய்வித்த தெய்வப்பிள்ளையாரைச் "**சைவசிகாமணி**" என்று போற்றி வழிபடுகின்றனர் நம்பிகள்.

நம்பிகள் "**சைவசிகாமணி**" என்ற தொடரால் பாலருவாயரைப் பாராட்டும் இடங்கள் ஆழ்ந்து சிந்தித்தற்குரிய பொருளாழம் உடையவை. அவை பின்வருமாறு:

" மொழிவது **சைவசிகாமணி** மூரித்தடவரைத் தோள்
தொழுவது மற்றவன் தூமலர்ப் பாதங்கள் " 3

" அவர்சென் றணுகுவர் மீள்வதிங் கன்னே அருகர் தம்மை
தவர்கின்ற தண்டமிழ்ச் **சைவசிகாமணி** " 4

" தனமே தருபுகழ்ச் **சைவசிகாமணி** தன் அருள்போல்
மனமே புகுந்த மடக்கொடியே " 5

" ஆறுமண்டப் பண்டு செஞ்சொல் நடாத்தி, அமண்முழுதும்
பாறு மண்டக் கண்ட **சைவசிகாமணி** " 6

" என்றும் அடியவர் உள்ளத்திருப்பன; இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன; நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்குரியன; ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் **சைவசிகாமணி** பொன்னடியே " 7

" வைகையில் அமணரை வாதுசெய் தறுத்த
சைவசிகாமணி சம்பந்தன் வெற்பில் " 8

" மங்கையிடத் தரனைக்கவி நீரெதிர்ஓட மதித்தருள் செய்
தங்குபுகழ்ச் சதுர்மாமறை நாவலர் **சைவசிகாமணி** " 9

---

3. , 5 ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி பா. 11, 14, 78.

6 ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் பா. 9.

, 8 ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை பா. 3, 13.

9 ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பா. 15.

"கைதவத்தால் என்னிடைக்கு நீவந்த தறியேனே கலதிப்பாண !
மெய்தவத்தார் உயிரனைய மிகுசைவ சிகாமணியை" 10

"செம்மலர் மாது சேர்ந்திறை பிரியாக்
கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி" 11

நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கில் மேற்கண்ட ஒன்பது இடங்களில், "சைவசிகாமணி" என்று வாயாரப் பாராட்டிப் போற்றி வணங்கும் நுட்பத்தைச் சைவவுலகம் ஊன்றி உணர்தல் வேண்டும்.

"சைவசிகாமணி" என்று சாற்றியது ஏன் ?

திருஞானசம்பந்தர் சைவநெறிக்கு முடிமணியாகக்கொள்ளத் தக்க அருஞ்சிறப்புக்கள் பலவற்றை இயல்பாக உடையவராக விளங்கினர். சிவனருளை உறுதியாகப் பற்றிக்கொண்டு மிக்க இளம் பருவத்தும் அஞ்சாது புறச்சமயப் பகைவரை வேரறுத்த வீறு உடைய வித்தகர் ஆவர். அருளாளராகவிளங்கிய பிள்ளையாரின் அஞ்சாமையே புறச்சமயப் பகை நீறுகியழிய நற்றுணையாயிற்று.

10, 11 ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பா. 31, 37.

(தொடரும்)

கடிதம்

வெ. லட்சுமிநாராயணன்
நிர்வாகி
ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மடம்

சிறுப்பாதீஸ்வரம்
கன்யாகுமரி மாவட்டம்
26—7—80

* தாங்கள் சமய வளர்ச்சிக்கு வெளியிடும் "ஞானசம்பந்தம்" இதழ் ரௌத்திரி ஆண்டு ஆனித்திங்கள் 10—7—80 இதழ் 8ல் 'வரவேற்கிறோம்! வற்புறுத்துகிறோம்!!' என்றசெய்தியைப்படித்தேன். மகிழ்ச்சி அடைந்தேன். மிக்க நன்றி. இதுமாதிரி செய்திகளை மீண்டும் வெளியிடப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

வாழ்க உங்கள் உழைப்பு. உங்கள் புகழ் உலகமெல்லாம் புகழ இறைவனை வேண்டுகிறேன்.

" கல்லூர்ப் பெருமணம் வேண்டா "

சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

" கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே "

முன்னுரை :

இப்பாடல், திருஞானசம்பந்தர் " தமக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்பதைக் குறித்தது " என்று கொண்டு, ஒருசிலர் பின்வருமாறு இதற்குப் பொருள் கூறுவர்.

" **தொண்டர் நல்லூர்ப் பெருமணம்மேய நம்பானே** - அடியார்கள் சூழ்ந்த திருநல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்தில் மேவிய சிவபெருமானே !

பெருமணம் ஊர் சொல் சூடலரே - மிக்க மணமாகியபொருள்கள் பொருந்திய பாடல்கள் ஆகிய மலர்களைச் சூடுதலை உடையீர் !

கல்லூர்ப் பெருமணம் வேண்டா - அம்மியின்மேல் மனைவியின் காலை வைத்தல் முதலிய சடங்குகளை உடையதாகிய பெரிய திருமணம் எனக்கு வேண்டா !

கழுமலம் பல் ஊர்ப் பாட்டு மெய் ஆய்த்தில - திருக்கழுமலம் (சீர்காழி) முதலாகிய பல தலங்களிலும் நான் பாடிய தேவாரப் பதிகங்களும் மெய்யாகவில்லையா ? எத்தலத்திலேனும் எனக்குத் திருமணம் வேண்டுமென்று கேட்டதுண்டா ? " என்பது, அவர்கள் கூறும் பொருள் ! (மூன்றும் திருமுறை. பக்கம் 598, தருமையாதீனப் பதிப்பு).

ஐயப்பாடுகள் :

இப்பாடலுக்கு இங்ஙனம் பொருள்கொள்ளும்கால், பின்வருமாறு ஒரு சில ஐயப்பாடுகள் தோன்றுதற்கு இடமுள்ளது; 1. ' தொண்டர் ' என்பது நல்லூர்ப்பெருமணத்திற்கு அடைமொழியா ? 2. ' சொல்

ஊர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்' என்று, கிடந்தவாறே பொருள் கொண்டால் என்னை? 3. 'கல்லூர்ப் பெருமணம்' என்பதற்கு, 'அம்மியின்மேல் மனைவியின்காலை வைத்தல் முதலிய சடங்குகளை உடையதாகிய பெரிய திருமணம்' என்று பொருள்கொள்ளுதல் ஒன்றுதான். இங்குப் பொருந்துமா? இஃது ஒருவகைக் காலவழு (Anachronism) ஆகும். 'அம்மி மிதிப்பக் கனுக்கண்டேன் தோழீ நான்' என்றாற்போல, பிற்றைநாளில் ஆண்டாள்நாச்சியார் முதலானோர் பாடியிருப்பதல்லது, திருஞானசம்பந்தர்காலத்தில் அவ்வழக்கம் இருந்தது என்பதற்கோ, அல்லது திருமணச் சடங்குகளில் அது முதன்மை இடம் பெற்றிருந்தது என்பதற்கோ, யாது சான்றுளது? (4) 'மெய்ஆய்த்தில' என்பது மெய்யாகவில்லையா? என்று பொருள்படுமாறு யாங்ஙனம்? ஒரோவழி அப்பொருள்படுமாயினும், 'எத்தலத்திலேனும் எனக்குத் திருமணம் வேண்டும் என்று கேட்டதுண்டா' என்னும் குறிப்பு அதில் வெளிப்படுமாறு எங்ஙனம்? (5) 'சூடலர்' என்னும் படர்க்கைச் சொல்லை, 'சூடுதலை உடையீர்' என்று முன்னிலை விளிப்பொருள் தரவல்லதாகக் கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும்? 'தாளிற் கொள்ளலிர் வாளில் தாரலன்' எனவரும் புறநானூற்றுவரியில், 'கொள்ளலிர்' என்னும் சொற்போல, 'சூடலிர்' என வந்திருப்பினன்றே, அஃது ஒருவகையில் 'சூடுதலை உடையீர்' என்று பொருள்படும். (6) திருஞானசம்பந்தர் திருமணத்தில் தமக்கு விருப்பில்லை என்பதனைக் 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்னும் தொடரால் குறித்தனராயின், முன்பு அவர் "மறைவாழ, அந்தணர்தம் வாய்மை ஒழுக்கம் பெருகும் துறைவாழச், சுற்றத்தார் தமக்கு அருளி உடன்படல் எற்றுக்கு?" எனப் பலவகை ஐயங்கள் நிகழ இடமேற்படுகின்றது.

சம்பந்தரின் விண்ணப்பம் :

திருஞானசம்பந்தர், திருமணவெறுப்பாளரோ (Misogamist), பெண்ணினவெறுப்பாளரோ (Misogynist) அல்லர்; திருமருகலில் அவர், ஒரு வணிகனின் மகளுக்கும், அவள்தன் காதலனுக்கும் திருமணம் செய்துவைத்து வாழ்த்தியருளியமை, ஈண்டுக் கருதற்பாலது. ஞானசம்பந்தர் "இந்த இல்லொழுக்கம்வந்து சூழ்ந்ததே!" என்றது, இல்லொழுக்கத்தை இகழ்ந்ததோ வெறுத்ததோ அன்று' 'அந்தமில் சிவன்தாள் சேர்வன்' என்னும் ஆதரவு (விருப்பம்) அவர்க்குப் பொங்கியது. அந்நிலையில் அதற்கு ஒரு தடைபோல வந்தமையினாலேயே, 'இந்த இல்லொழுக்கம்வந்து சூழ்ந்ததே!' என்று அவர் குறிப்பிட்டருளினர். 'பவம் அற என்னை முன்னாள் ஆண்ட அப் பண்புகூட, நவமலர்ப்பாதம் கூட்டும்! (கூட்டியருள்க)

என்னும் (என்று விண்ணப்பித்துக்கொள்ளும்) நல்உணர்வு, அவர்க்கு நண்ணியது ஆதலால்தான் 'நல்லூர் மேவும் பெருமண நம்பனே! உன்பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈது' என்று சிவபெருமான்பால் விண்ணப்பித்துக்கொண்டு, திருஞானசம்பந்தர் இப்பாடலைப் பாடியருளினர்.

மங்கலவழக்கு :

ஆதலின் இங்குக் '**கல்லூர்ப் பெருமணம்**' என்றது, "ஆடவர் பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" என்று அகநானூறும்; "கெடுவில் நல்லிசை சூடி நடுகல் ஆயினன் புரவலன்" என்று புறநானூறும்; "என்னை முன் நில்லன் மின் தெவ்விர், பலர் என்னை முன்னின்று கல்நின்றவர்" என்று திருக்குறளும் போன்ற, பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறும் வண்ணம், நடுகல் நாட்டும் நயனில் நிகழ்ச்சிக்குக் காரணமாகும் **இறப்புத் துன்ப நிலை** யினையே, மங்கல வழக்கு (Euphemism) முறையில், குறிப்பதாகக்கொள்ளுதல் பொருந்தும்.

பல்லூர்ப்பெருமணம் :

சிவபெருமானை வழிபடும் நன்மக்கள் ஆகிய சிறந்த அடியவர்கள் ஏனைய இழிந்த பல புன்மக்கள் 'ஓடி உய்தலும் கூடும்மன், ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே' என்றபடி, உலகியல் வாழ்க்கைச் சேற்றில் சிக்கி அழிந்து உழன்று சிதைந்து சீரழிந்து வருந்தி மாய்வது போன்ற, ஒரு நிலையினை அடையமாட்டார்கள்; "உயிர்போகு பொது நெறியில்" இறந்து மறைந்தொழியும் ஏனையோர்போலும் நிலை சிவனடியார்களுக்கு ஒருபோதும் நேர்வதில்லை; "சம்பந்தன் பாடிய பத்தும் வல்லார் பரலோகம் சேர்வார்-வானோர் வணங்க மன்னி வாழ்வார் - என்றும் வானவரோடு இருப்பார் - ஓங்கு அமராவதியோர் தொழச் செல்வது உண்மை - வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்றெல்லாம், ஆணையிட்டு ஆங்காங்கே உறுதிகள் மொழிந்து, நினது ஒப்புயர்வற்ற பொருள்சேர் புகழினையே 'பல்லூர்ப்பெருமணம்' எனத்தக்க நிலையில் யான் இதுகாறும் பல தலங்களுக்கும் சென்று போற்றித் துதித்துவந்தேன். அங்ஙனம் நின்னைப் போற்றிப்புகழ்ந்து துதித்த திருப்பாடல்கள் பொய்யாகாதபடி, எம்மை இறவா நிலையில் இருத்தி, நின் திருவடிப்பேற்று இன்பம் அளித்தருள்க என்று, நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானை, ஞானசம்பந்தப்பெருமான் இப்பாடலால் நயந்தினிது வேண்டிக்கொண்டருள்கின்றார்.

பாடலின் பொருள் :

" நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே! எனக்கும் என்னைச் சேர்ந்த நின் தொண்டர்கள் எல்லோருக்கும் **நடுகல்லில் ஊர்ந்து நிற்கும் பெருமணம் ஆகிய இறப்புத் துன்ப நிகழ்ச்சி எய்துதல் வேண்டா.** எமக்கு இறப்புத் துன்பநிலை நேருமாயின் கழுமலம் (சீர்காழி) முதலாகத் தொடங்கிப் பல தலங்களுக்கும் சென்று, சிவ மணம், தமிழ்மணம், பக்திமணம், ஞானமணம் அருள்மணம் முதலிய பல பெருமணங்கள் ஒருங்கு கமழும்படி, எளியேனின் வாயிலாக நீர் பாடுவித்த நின் புகழாகிய தேவாரத் திருப்பதிகங்கள், **மெய்ம்மை உடையன ஆகமாட்டா** ('கழுமலம் பல்ஊர்ப் பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில'); அங்ஙனம் மெய்ம்மை உடையன ஆகாமல், பொய்ம்மைப் படுமாயின், பெருமணம் நிறைந்த தெய்விகச் சொற்களால் ஆகிய அத் திருப்பதிகங்களை, வழிவழியாகப் பிற்காலத்து **வரும் தொண்டர்களாகிய நின் அடியவர்கள்** பெரிதும் மதித்து அன்புடன் ஏற்றுத் **தம்தலைமேல் சூடிக்கொண்டு போற்றமாட்டார்களே!** ('சொல்ஊர்ப் பெருமணம் தொண்டர் சூடலரே'); அது நின் திருவருட்டிறனுக்கே அன்றோ, பெரியதோர் இழுக்காகும். அங்ஙனம் ஆகாதபடி, எனக்கும், என்னைச்சார்ந்த இங்கு வந்துள்ளோர் ஆகிய **எல்லோருக்கும் இறவாப் பெருநிலை அளித்து, நின் திருவடித் திருவருள் இன்பப் பேற்றினை வழங்கியருள்க** " என்பதே இப்பாடலின் திரண்ட சிறந்த கருத்தாகும்.

முடிவுரை :

திருஞானசம்பந்தப்பெருமான், தமது உலகியல் வாழ்க்கையின் இறுதி நிறைவு பெற்ற நிலையில், இறைவனோடு இரண்டறக் கலந்து இன்புறும் பெருவாழ்வு பெற விரும்பி வேண்டுகோள் செய்தருளிய இத் திருப்பாடலால், தமது வாழ்க்கை முழுவதும் அவர் செந்தமிழ்ச் சிவநெறிப் பண்பாட்டினைப் பாதுகாத்தற்குப் பாடுபட்ட அருமையும்; தமக்குப் பின்னரும் தாம் வளர்த்த செந்தமிழ்ச் சிவநெறிப் பண்பாடுகள் பலவும் பின்வரும் தொண்டர்களால் பெரிதும் மதித்துப் போற்றி ஓம்பப்பெறவேண்டும் என்னும் அவரது உள்ளார்ந்த பெரு விருப்பமும்; அங்ஙனம் தமக்குப் பின்வரும் தொண்டர்கள் செய்தல் வேண்டுமாயின், தம்வாழ்க்கையிலும் சொற்செயல்களிலும் முன்னுக்குப்பின்னர் எத்தகையதொரு முரண்பாடும் மாசுமறுவும் இருத்தலாகாதே என அஞ்சிக்கவன்றுநின்ற பொறுப்புணர்ச்சிமிக்க அவர் தம் கடமை ஆர்வமும் மலையிலக்கென வெளிப்பட்டு நிற்றல் காணலாம். இஃதன்றோ தலைவர் எனப்படுவோர் எல்லோர்க்கும் இருத்தற்குரிய சிறந்த பண்பாகும்.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N. I. U ,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(26) காலைசந்தி மாலைசந்தி, மாத்யான்னிகம் என்ற மூன்று வேளைகளில் செய்யும் சந்தியாவந்தன வழிபாட்டில் அவளே வந்து காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி எனப் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(27) துருவாசர் இயற்றிய லலிதாஸ்தவ ரத்தினம் என்னும் ஸ்ரீநகர விமரிசனத்தில் "மஹாமேருவின் கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு திக்குகளின் சோடியில் இருக்கும், பிரும்ம விஷ்ணு ருத்ர லோகங்களுக்கு ஆதாரமான மூன்று தாழ்வரைகளையும் வணங்குகிறேன்" என்று கூறுகிறார். ஆகவே அந்த முப்புரத்தில் அம்பிகை சான்னித்யம் கொள்வதாலும் முப்புரை ஆனாள்.

(28) மற்றும் ஸ்ரீவித்தையில் குறிப்பிடப்படும் ஜாலந்திரபீடம், காமகிரிபீடம், ஒட்யாணபீடம் ஆகிய மூன்று பீடங்களில் எழுந்தருளுவதால் முப்புரை ஆனாள்.

(29) அம்பிகை வழிபாட்டில் மூன்று முக்கிய அங்கங்கள் உண்டு. குருநாதர் – உபாஸகர் – தேவி ஆகியவையே அவை. இம் மூவரின் சொரூபமாகவும் அம்பிகையே இருக்கிறாள். அதனால் அவள் பொருந்திய முப்புரை ஆனாள்.

(30) ஸ்ரீவித்தையில் மூன்று குருமண்டலங்கள் குறிக்கப்படும். அவை திவ்யௌக குருமண்டலம், ஸித்தௌக குருமண்டலம், மானௌக குருமண்டலம் என்பன. அக்குருமண்டலங்களிலும் குருவின் ரூபமாக அம்பிகையே பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(31) ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்னும் மூன்றுவகைத் துன்பங்கள் நமக்கு ஏற்படும். அவற்றைக் கொடுப்பவளும் அவளே, " ஆக்கம் தானுவாள், அழிவு நிலையாவாள்.........

நோவுங் கொலேயும் நுவலொணுப் பீடைகளும், சாவும் சலிப்புமென தான்பல கணமுடையாள் என்பார் பாரதியாரும், மூவகை இடங்களுக்கும் காரணமாய்ப் பொருந்துவதால் 'முப்புரை' ஆனுள்.

(32) மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றிலும் பொருந்துவதாலும் மற்றும் மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றில் பொருந்துவதாலும் முப்புரை ஆனுள்.

(33) மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அவளது சான்னித்தியத்தாலேயே சிறப்புப்பெறுவதால் பொருந்திய முப்புரை ஆனுள்.

(34) பக்தி, ஞானம், கர்மம் ஆகிய மூன்று மார்க்கங்களிலும் அவளே பொருந்துவதால் 'முப்புரை' ஆனுள்.

(35) அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய மூன்று சித்தாந்தங்களிலும் அம்பிகைக்கு இடமுண்டு. அதனுலும் 'முப்புரை' ஆனுள்.

(36) ஸ்ரீவித்தையில் குறிப்பிடப்படும் காதிவித்தை - ஹாதி வித்தை - ஸாதிவித்தை ஆகிய மூன்றிலும் பொருந்துவதால் 'முப்புரை' ஆனுள்.

(37) முக்கோணங்களின் பக்கங்கள் மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகியவைகளைக் குறிக்கும். அவற்றில் பொருந்துவதால் 'முப்புரை' எனப்பட்டாள்.

(38) ஸ்ரீவித்யாசாஸ்திரம் மூன்று உட்பிரிவுகளை உடையது. ஆனந்தபைரவமதம் என்றும், ஹயக்ரீவமதம் என்றும், தக்ஷிணு மூர்த்திமதம் என்றும் அவை பெயர்பெறும். அம்மூன்று மதங்களிலும் பொருந்துவதால் 'முப்புரை' ஆனுள்.

(39) ஸ்ரீசக்ரத்திலும் மூன்று பிரிவுகள் உண்டு. சம்ஹாரசக்ரம், ஸ்திதிசக்ரம், சிருஷ்டிசக்ரம் என்பவை அவை. அவற்றில் பொருந்துவதால் 'முப்புரை' ஆனுள்.

(40) பரமாத்மதத்துவப், ஈச்வரன் - ஜீவன் - பிரம்மாண்டம் என மூன்ருக விரிகிறது. அம்மூன்ருகவும் அம்பிகையே பொருந்துவதால் 'முப்புரை' எனப்பட்டாள்

(41) த்ரைலோக்யமோஹனம் முதலான ஒன்பது ஆவரணங்களிலும், முறையே திரிபுரா, திரிபுரேசி, திரிபுரசுந்தரி, திரிபுராவாசினி, திரிபுராஸ்ரீ, திரிபுராமாலினி, திரிபுராஸித்தா, திரிபுராம்பிகா, மஹா திரிபுரசுந்தரி ஆகிய தேவதைகளின் உருவில் அம்பிகையே எழுந்

தருளுவதால் பொருந்திய முப்புரை என்ருர். இங்கு மூன்ருவது ஆவரணத்தில் இருப்பவள் பெயர் 'திரிபுரசுந்தரி' என்பதும் குறிப்பிடத்தக்கது.

(42) சௌந்தரிய லகரி உரையில் பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'புரம்' என்று பீஜாட்சரத்துக்கு பெயர் உண்டுஎன்கிருர். "பராம்பிகையின் மூலமந்திரவர்ணங்களே 'திரிபுர' மென்று சொல்லப்படும். அந்த மூன்று பீஜாட்சரங்களாகிய பாலினை, சிவபெருமான் தன் மனது என்னும் மத்திஞல் கடைந்தார், அதிலிருந்து நவநீதம் (வெண்ணெய்) போல ஜகதீஸ்வரியின் ஸ்வரூபம் ஆவிர்பவித்தது. அக்காரணத்தால் பரமசிவனுக்குத் திரிபுரமதனன் (முப்புரங்களைக் கடைந்தவன்) என்னும் பெயர் உண்டாயிற்று" எனவும் அவர் விளக்குகிருர். தனது மூன்று பீஜாட்சரங்களாகிய புரத்துக்கு உரியவள் ஆதலின் 'முப்புரை' ஆனுள்.

(43) சத் - சித் - ஆனந்தரூபமாய் ஸ - உமா - ஸ்கந்தனாக சோமாஸ்கந்தமூர்த்தியாய் விளங்கி அருள்பாலிக்கும் அம்பிகையினை லலிதா சகஸ்ர நாமம் 'சச்சிதானந்தரூபிணி' என்று போற்றுகிறது.

நாற்பத்துமுக்கோண நடுவில் வாழும் அவளது திருவடியில் இந்த நாற்பத்துமூன்று விளக்கங்களையும் சமர்ப்பித்து எங்கும் சச்சிதானந்தம் நிலைக்க முப்புரையினைப் பிரார்த்திக்கிறேன்.

(ஆ) செப்புரை செய்யும் புணர்முலையால் வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி

(1) செப்புக்கலசம் போன்ற தனபாரத்திஞல் வருந்திய கொடி போன்றஇடையினையுடைய மனோன்மணி என்னும் பெயருடையவள் என்பது பொதுவான பொருள்.

(2) அம்பிகையின் திருமுலைகள் இரண்டும் 'பரஞானம்' 'அபரஞானம்' என்னும் இருவகை ஞானங்களாகும். தூயவுடம்பினஞதல் என்பது இறைவனின் எண்குணங்களில் ஒன்று. ஆதலால் அம்பிகையின் சரீரமும் நம்முடையதுபோன்ற மாமிசசம்பந்தமான ஊனுடல் அன்று என்பதனையும் 'திவ்யமங்கள சரீரம்' எனும் தூய அழகுடல் என்பதனையும் நாம் அறிதல் அவசியம். மற்றும் அம்பிகையின் திருமேனி குறித்த வருணனைகள் வருமிடங்களிலெல்லாம் இக்கருத்தை நினைவில் கொள்ளவேண்டும்.

(3) பரஞானம், அபரஞானம் இரண்டும் ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புடையனவாதலின் இடைவெளியின்றி நெருங்கிய 'புணர்முலை' என்ருர்.

(4) பொன்னை உருக்கி அணியாக்கச் செம்புகலக்கவேண்டும். அதுபோல் பொன்னைநிகர்த்த புண்ணியர்களும் அம்பிகை அருளும் "ஞானசம்பந்த"த்தால் மேல்நிலை எய்துகின்றனர். செப்புக்கலசம் உருவத்தால் மட்டுமின்றி உட்கருத்தாலும் இங்ஙனம் உவமை யாயிற்று.

(5) செப்புக்கலசம் கோபுரத்தின் உச்சியில் இடம் பெறும். அவ்வாறே புணர்முலைகளாகிய ஞானங்களும் மேல்நிலை பெறும். செப்புக்கலசம் புனிதமான பொருளாகும். புணர்முலையும் புனிதமாய் எண்ணத்தக்கது.

(6) "கரிகலப கும்பஸ்தன நதா பரிக்ஷீண மத்யே" என்கிறது சௌந்தரியலகரி. அதாவது "யானையின் மத்தகம்போன்ற தனபாரத்தினால் சற்றே சாய்ந்த மெல்லிடையுடையவள்" என வருணிக்கிறது.

(6-A) 'தனுமத்யா' (குறுகிய இடையாள்) என லலிதாசகஸ்ர நாமமும், "ஸ்தனபரநமிதா" (ஸ்தனபாரத்தினால் வளைந்தவள்) என்று ஸ்ரீ சூக்தமும் அம்பிகையினை வருணிக்கின்றன.

(7) 'மனோன்மணி' என்பது அம்பிகையின் ஆயிரம் பெயர்களுள் ஒன்று. 'உன்முகம்' என்றால் மேல்நோக்கியது என்பது பொருள். மனத்தினை மேல்நிலைக்கு அல்லது மேல்நோக்கி எழுப்புபவள் ஆதலால் மனோன்மணி ஆனாள். மனோன்மணி சக்தியின் இருப்பிடம் புருவமத்திக்குமேல் என்பர்.

(8) வாமதேவாயநம: ....மனோன்மனாயநம: என்று சிவபெருமான் போற்றி வணங்கப்படுகிறான். மனோன்மனனாக அதாவது மனத்துக்குள் மனமாக அல்லது மனத்துக்கு உகந்தவனாக இனியவனாக இருக்கிறான் மனோன்மனனின் சக்தியாதலால் அம்பிகையும் மனோன்மணியானாள் அல்லது அவளே மனத்துக்குள் மனமாக - மனத்துக்கு உகந்தவளாக இருப்பதாலும் மனோன்மணியானாள்.

(9) "மனச்ச - சங்கல்ப - விகல்ப - சூன்யம் மனோன்மணி" என்று உரையாசிரியர் அண்ணா சுப்பிரமணிய அய்யர் எடுத்துக் காட்டுவதுபோல் மனத்தின் சலனமற்ற - அசைவற்றநிலை மனோன்மணி நிலையாகும். அதாவது மன அமைதியினை அளிப்பவள் மனோன்மணி எனலாம்.

இ வார் சடையோன் அருந்திய நஞ்சு
அமுதாக்கிய அம்பிகை

(1) நீண்ட சடையுடைய சிவபெருமான் உட்கொண்ட ஆலகாலத்தை அமுதாக மாற்றியவள் அம்பிகையாவாள். அவளது கரம் பட்டவுடன் அனைத்தும் நல்லவைகளாகவே ஆகும் என்பது கருத்து.

(2) மூலாதாரத்தில் நஞ்சாக இருக்கும் சக்தி குண்டலியோகப் பயிற்சியின் மூலம் "சகஸ்ராரத்தில்" அமுதரஸமாகிறது என அபிராமி அந்தாதிக்கு சாக்தரீதியாக உரையெழுதிய திண்டுக்கல் திரு. சண்முகநாதன் அவர்கள் விளக்குவார்.

(3) நஞ்சுண்ட நாதனைக்குறித்த கவலையன்றியும், அவனது சரீரத்துக்குள் உறையும் அனைத்துயிரையும் காக்கும் கருணையுடன் நஞ்சினை அமுதாக்கினாள்.

(4) நஞ்சு அமுதாதலும், நன்மை தீமையாதலும், வறியவர் செல்வர் ஆதலும் மூடன் அறிஞனாதலும் ஆகியமாற்றங்கள் எல்லாம் அன்னையின் ஆடல்கள் ஆகும்.

ஈ. அம்புயமேல் திருந்திய சுந்தரி

(1) "தாமரைமலரின்மேல் எழுந்தருளிய அழகி" என்றார். கலைமகளும், திருமகளும் முறையே வெண்தாமரை, செந்தாமரை மலர்மேல் வீற்றிருப்பதனை அறிவோம். அம்பிகை எழுந்தருளும் தாமரை மூலாதாரக் கமலம் முதல் சகஸ்ராரம் ஈறாகவுள்ள தாமரைகளாகும்.

(2) சித்தத்தை ஒருமைப்படுத்தியயோகிகளுக்கு தாமரைகளின் மிசை அம்பிகை மிகவும் அழகான - நேர்த்தியான - கம்பீரமான - கருணை நிறைந்த தோற்றத்தைக் காட்டியருளுவதால் 'அம்புயமேல் திருந்திய சுந்தரி' என்றார். சிறிதும் குறையில்லாத - அழகிலக்கணம் குன்றாத (Spotless and Perfect beauty) எழிலுடையவள் என்பதனையே "திருந்திய சுந்தரி" என்ற அடைமொழி குறிக்கும்.

(3) சுந்தரன், சுந்தரேசன் ஆகிய பெயர்களையுடைய சிவபெருமானின் துணைவியாதலால் 'சுந்தரி'யானாள்.

(4) அழகு - குணம் - ஆற்றல் - கருணை ஆகிய சௌந்தரியங்களின் கடலாகி "சௌந்தரியலகரி" என்றே வருணிக்கப்படும் அழகுக் கடலாகிய அவளைச் சுந்தரி என்றார்.

உ. அந்தரி

(1) உள்ளே இருப்பவள் என்றும், அந்தரத்தில் இருப்பவள் என்றும், பரவெளியில் இருப்பவள் என்றும் பொருள்படும்.

(2) லலிதாசகஸ்ரநாமம் 'பராகாசா' என்கிறது. அதாவது பரவெளியில் அல்லது ஆகாசத்தின் ரூபமானவள். 'ஆகாச'மென் பதை மனிதர் - தேவர் - அசுரர் முதலானோரின் அறிவுக்குட்பட்ட ஆகாயமென்றும், பராகாசமென்பது அனைவரின் அறிவுக்கும் அப்பாற் பட்ட ஆகாயமென்றும் பொருள்கொள்ளலாம். அப்பராகாசமாக நிற்பதால் 'அந்தரி' ஆனாள்.

(3) விண்ணில்காணப்படும் கோள்களை "அந்தரத்தில் நிற்கின் றன" என்கிறோம். ஆனால் அவற்றின் சுழற்சிக்கும் ஈர்ப்புச்சக்தி ஆதாரமாகிறது. அம்பிகை தனக்கு ஆதாரமேதுமின்றி நிற்பவள். லலிதாசகஸ்ரநாமம் 'நிராதாரா' என்கின்றது. அவளே அனைத் துக்கும் ஆதாரம் என்பதுகருத்து. அவ்வாறு ஆதாரமொன்றுமில்லாத நிலையில் நிற்பவள் 'அந்தரி' எனப்பட்டாள்.

(4) மீண்டும் லலிதாசகஸ்ரநாமம் அவளை 'தஹராகாசரூபிணி' எனப் போற்றுகிறது. உரையாசிரியர் 'அண்ணா' சுப்பிரமணிய அய்யர் அவர்கள் "எல்லாவற்றுக்கும் மிகவுள்ளே Inner most ஆக இருக்கும் தஹராகாசவடிவினை அறியக்கடவது" என்ற சாந்தோக்ய உபநிடதக் கருத்தையும், ஸ்ரீமத் அப்பைய தீட்சிதரின் 'ரத்னத்ரய பரீக்ஷை'யிலிருந்து "மனோவாக்குக்கு அப்பாற்பட்ட அந்நிலை யினையே ஞானிகள் சுகமென்றும் பூரணமென்றும் போற்றிப் புகழ் கின்றனர்" என்ற கருத்தையும் ஒப்புமைகாட்டி விளக்குகின்றார். அந்த தஹராகாசமென்னும் innermost நிலையில் இருப்பவளை 'அந்தரி' என்றார்.

(5) அவ்வாகாயம் இதயத்தானத்தில் இருக்கிறதென்பர். அனைத் துயிர்களின் உள்ளே இதயத்தானத்தில் வீற்றிருப்பதால் அந்தரி என்றார்.

(6) அம்பிகையின் ஸ்ரீநகரத்தினைச்சுற்றி எட்டு உலோகக் கோட்டைகள், பதினொரு இரத்தினப் பிராகாரங்கள் ஆறு மஹா பத்மாடவி பிராகாரங்கள் ஆக இருபத்தைந்து கோட்டைகளுள்ளன. அவற்றுக்கும் உள்ளே சிந்தாமணி கிருகத்தில் ஒன்பது ஆவரணங் களையும் கடந்த 'பிந்துமண்டல'மென்ற உள்நிலையில் எழுந்தருளு வதால் "அந்தரி" ஆனாள்.

(7) அணுவினைச் சதகூறிட்ட கோணினுள்ளும் அவளே நுண் ணிய சக்தியாக வீற்றிருப்பதால் 'அந்தரி' என்றார்.

ஊ. பாதம் என் சென்னியதே.

(1) முப்புரையாகவும், மனோன்மணியாகவும், சுந்தரியாகவும் அந்தரியாகவும் உள்ள அம்பிகையின் திருவடிகளை எனது தலையில்

சூட்டிக்கொண்டுள்ளேன். அல்லது திருவடியினை தலையால் வணங்குகின்றேன்.

(2) அம்பிகை பாதம் ஸ்ரீவித்யா உபாஸகர்களின் சிரசில் இருக்கிறதென்பதும், அம்பிகை பாதம் இருப்பதால் அவர்கள் சாதாரண மனிதர்களுக்கு வணக்கம் செலுத்து தலை தவிர்க்கவேண்டுமென்பதும் மரபு. அதனாலேயே பட்டர் மற்றவர்களைப்போல் மன்னனைக்கண்டு வணங்கவில்லை என்பதுதோன்ற “ அந்தரி பாதம் என் சென்னியது” என்றார்.

(3) “ கண்பார்வை நன்றாக இருக்கிறது ” என்றும் “ காது கேளாது ” என்றும் தொகுதி ஒருமையாகக் கூறுகிறோம். அதுபோல் பாதங்கள் என்னாது ‘ பாதம் ’ என்றார்.

(4) அர்த்தநாரீசுவரவடிவில் அவள் பாதம் ஒன்றேயாகலின் ‘ அந்தரிபாதம் ’ என்றார்.

(5) முச்சுடர்களிலும் பொருந்தும் முப்புரைபாதம் தன் சென்னியிலும் இருப்பதால் தண்மதி வரவு தப்பாது என்ற உறுதிப்பாட்டில் “ அந்தரிபாதம் என்சென்னியதே ” என்றார்.

இப்பாடலின் பாராயணபலன் கனவில் அம்பிகை தரிசனம் கிட்டுதல் ஆகும்.

“ ஞானசம்பந்தம் ”

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா	(சிலோன்)	...	ரூ.	11—00
ஆண்டுச் சந்தா	(வெளிநாடு)	...	ரூ.	17—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	...	ரூ	100—00
ஆயுள் சந்தா	(வெளிநாடு)	...	ரூ.	125—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம், மாயூரம் 609001, தஞ்சை மாவட்டம்.

முனிமொழி

நக்கீரன் வழியடிமை,

புலவர். திரு. பி. மா. சோமசுந்தரனுர்

(மலர் 39, இதழ் 7, பக்கம் 302 இன் தொடர்ச்சி)

4 **மாயாவாதம் என்பது யாது ?**

" மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித் தார்த்து " என்பர் மணிவாசகப்பெருமான். இதுகொண்டு இவர் சங்கர ஆசியருக்குப் பின்தோன்றியவர் என்பர் ஒரு சிலர் மாயா வாதம் சங்கர ஆசிரியருக்கு முன்பே இருந்ததை இன்னேர் உணர் கிலர், மாணிக்கவாசகர்காலத்தே புத்தமதமே எழுச்சி பெற்றிருந் ததை அவர்தம் வரலாற்ருல் உணரலாம். பல்வகைச்சமயக் கோட் பாடுகளையும்கூறிய மாணிக்கவாசகர் புத்தமதத்தைக்கூருது விட்டார் எனல் தவறேயாம் புத்தக்கொள்கையே மாயாவாதம் என அக் காலத்து வழங்கப்பட்டது. அதனையே அடிகளார் குறித்தார் என்பது உணர்க.

" இவ்வாறு இப்பௌத்த மதங்கள் எல்லாம் புறத்தே காணப்படும் உலகத்தையும், அகத்தே காணப்படும் உயி ரையும், இல்பொருள்கள் எனக் கோடற்கண் ஒருங்கு ஒத் தலின், இவையெல்லாம் மாயாவாதம் என ஒருபெயரான் வைத்து வழங்கப்பட்டன.

" பிற்காலத்தே தோன்றிய சங்கராசாரியார் கட்டிய கொள்கையும் உலகமும் உயிரும் இல்பொருள்களே ஆம் எனக்கோடலின் அதுவும் அப்பௌத்தமதத்தோடு ஒருங்கு வைத்து மாயாவாதம் எனவும் பிரசின்ன பௌத்தம்எனவும் வழங்கப்படலாயிற்று சங்கராசாரியார் காலத்திற்கு முன் னரே மாயாவாதி என்னும் பெயர் வழக்கும் அதனுல் குறிக்கப்படும் கொள்கையும் இருந்தமை அச்சங்கராசாரியார் க்கு முற்பட்டவரான திருமூலர் ' ஐயைந்து மாயாவாதிக்கே ' என்று அருளிச்செய்தமையால் நன்கு புலனும் " (மறைமலை அடிகளார்).

இதன் விரிவு வேண்டுமேல் மறைமலையடிகளார் எழுதிய மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் என்ற நூலிற் கண்டுகொள்க.

எனவே உபநிடதங்கள் பௌத்தமதக் கொள்கையின என்று கொண்டு வியாசர் நூலியற்றினுர் எனல் வேண்டும். அது சால்பிற்றன்று. இனி, பிரமசூத்திரம் மாயாவாத நூல் என்பார் கூற்று பின் வருமாறு :-

> " ஏகான்மவாதக் கொள்கைக்கே உரிய பரிணும வார்த்தை வியாச சூத்திரத்தில் இருக்கக்கண்டு சைவ வைணவ பாடியக்காரர்கள் அதனைத் தங்கள் சமயத்துக்கு வெகு கஷ்டத்துடன் திருப்பி அருத்தம் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இங்ஙனமாக வியாச சூத்திரத்திற்குள்ளே எந்தப் பாடியத்தின் கருத்து புகுந்துகொண்டிருக்கிறது எனத் தெரிதற்கில்லை.

(சித்தாந்தம் 1914 சூன் இதழ் - இதழாசிரியர் மணவழகு அவர்கள்)

சைவ வைணவப் பாடியங்களே முதலில் தோன்றியவை. மாயாவாதம் உபநிடதங்களால் கூறப்பட்டதும் அன்று; வியாசர் கொண்டதும் அன்று என்பதும் மேலே காட்டியுள்ளோம். நிற்க, தன்பால் இருந்து படைத்தலான் (ஆத்ம கிருதே) என்று கூறி அதன்மேல் எழுப்பும் தடைநீக்கத்தின் பொருட்டுப் பரிணுமத்தினுல் (பரிணுமாத்) என்று வியாசர் கூறிச்சென்றமை மாயாவாதநெறி ஆகாதோ எனில் ஆகாது என்னை? முண்டக உபநிடதத்துச் 'சிலந்தி எப்படி நூலைப் படைக்கிறதோ, மண்ணில் எப்படி ஓடதிகள் தோன்றுகின்றனவோ மாந்தர் உடம்பில் எப்படித் தலைமயிர் உடம்புமயிர் உண்டாகின்றனவோ அப்படியே பிரமம் ஆகிய அட்சரத்திலிருந்து யாவும் உண்டாகின்றன' எனவரும் மொழியால் பிரமத்திற்கு நிமித்தகாரணமும் உபாதான காரணமும் எய்துகின்றமையின். சிலந்திப் பூச்சியின் உடம்பே உபாதான காரணமும், அதன் உயிரே நிமித்தகாரணமும் ஆம். இதுபோல் உலகம் எல்லாம் நீக்கமற நிறைந்து நின்று அவற்றை உடம்பாகக்கொண்டுநிற்கும் சிவத்திற்கு உபாதானகாரணம் கூறுதல் போலிவழக்கேயாம். இவ்வாறு கொள்ளாக்கால் 'வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி ஊனுகி உயிராகி' எனவும், 'ஊனு, யுயிரானு, யுடலானு, யுலகானுய், வானுய், நிலனுனுய், கடலானுய், மலையானுய்' எனவும் இதுபோல் தமிழ்மறைக்கண் வரும் ஏனைய மொழிகளும் மாயாவாத மொழிகள் என்றே கொள்ளப்படவேண்டும் என்பதும் தெளிக.

பிரம சூத்திரத்திற்கு உண்டான முதல்பாடியமாகிய போதாயனம் சிவநெறித்தாம். அடுத்துத்தோன்றிய பாஸ்கரியமே வைணவாத்துவிதபாடியமாகும். இதைச் சுட்டியே நீலகண்ட சிவாசாரியார் முன்னை ஆசிரியரால் கலங்குதலுற்ற பிரமசூத்திரத்தின் பொருள் தம் பாடியத்தே தெளிவு செய்யப்படுவதாக உரைத்துள்ளார். நீலகண்டபாடியத்திற்குப் பின்னரே சங்கரரின் மாயாவாத பாடியம் எழுந்தது. இவ்வுண்மை தேராது வியாசர் நூலை மாயாவாதம் என மயங்கி வேத பாடியமான சிவாகமங்கள் எனும் பதிநூல் இருக்கப் பிரமசூத்திரம் ஆகிய பசுநூல் தேவையா என்பர். இதற்கு வேத சிவாகமங்கள் எனும் பதிநூல் இருக்கவும் சிவஞானபோதம் எனும் பசுநூல் தேவையா என எதிர்மறுத்து வினவவே விடையாம் என்க. அன்றியும் பதிநூல் இவை, பசு நூல் இவை என வேறு பிரித்தறிதற்கு எட்டுணைச் சான்றும் இன்று. பதிநூல் என வழக்கில் உள்ளவை வடமொழி மறைகளும் சிவாகமங்களுமேயாம்.

5. சைவ நூலே ?

மாயாவாதம் என்பது புத்தமதமே என்பதை முன்னரே நன்கு நாட்டினும். நம் நாட்டின் குடியரசுத் தலைவராய் இருந்த டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்,

> "மாயாவாதக் கொள்கையைத் தழுவிய விஷயம் யாதொன்றும் சங்கர பாஷியத்தில் காணப்படவில்லை என்று ஸ்ரீமான் கோல்புருக் கூறியது தவறான விஷயம். ஆனால் வேதாந்த நூல்கள் ஆகிய வேதங்களும், பழைய உபநிடதங்களும், வேதாந்தசூத்திரமும் மாயாவாதக்கொள்கையைக் கொஞ்சமேனும் குறிப்பாகக் கூறவில்லை என்று அவர்கள் கூறினது உண்மையே. மற்று அந்நூல்கள் பிரபஞ்சத்தின் நித்தியத்தையே உணர்த்துகின்றனஎன்று நாம் ஸ்தாபிக்கக் கூடும். பௌத்த சமயவாசனை யேற்றத்தினால் கௌடபாதர் உபதேசங்களை அனுசரித்து மாயாவாதக் கொள்கையை வேதாந்தசாத்திரத்துள் நுழைத்தது ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளே. பின்தோன்றிய சங்கரவேதாந்தத்துக்கு மாயாவாதக் கொள்கை இன்றியமையாத தொன்று. ஆனால் பழைய சுத்தாத்துவிதக் கொள்கையை உடைய வேதங்களுக்கும் பழைய உபநிடதங்களுக்கும் அக்கொள்கை புறம்பே"

என்று கூறுவதும் பௌத்தர் கொள்கையைப் பின்பற்றிய சங்கர மாயாவாதம் பின்னுளையதே என்பதும் அது வியாசர் கருத்தன்று என்பதும் நாட்டுதல் காண்க.

சங்கர நெறியினர் பிரமசூத்திரத்தைக் கொண்டாடுதல் கண்டே சித்தாந்தப்பிரகாசிகையார் அதனை ஏகான்மவாத நூல் என்று எழுதி யிட்டனர். இவர் உரை பிடித்தே சிவஞான முனிவரும் கூறினர் எனவே பொருத்த முடையது என்க. சிவஞானபோதப் பேருரை வரைவதற்காகவே சிவாகமங்களை முனிவர் படித்தார் என்பதுவரலாறு. இதனால் வடமொழிக்கண் உள்ள எல்லா நூல்களையும் உணர்ந்தவரே எனக் கொள்ளற்கு இடனின்று. சங்கரபாடிய நினைவால் சுத்தாத்து விதம் என்பதில் சுத்தம் அடைமொழியன்று என்றதூஉம் காண்க. மண்டலப்பிராமண உபநிடதத்தில் அம்மொழி பயில்வது உணர்ந் திருப்பரேல் அங்ஙனம் பொருள்கொண்டிரார். என்னை? அவ்வுப நிடதம் சங்கரர்போன்ற பாடியக்காரர்களுக்குக் காலத்தால் முற்பட்ட தாகலின் என்க.

மேலும் சித்தாந்தப் பிரகாசிகையாரும் சிவஞான முனிவரும் கூறுவனவே பொருண்மொழிகளாகக் கொள்ளத்தக்கன எனில், பின் வரும் அறிஞன்மார் உரைகளும் நூல்களும் தள்ளத்தக்கன என்ருகி விடும். அது சால்பிற்றன்று.

1. பவுட்கர ஆகமப்பேருரையில் பத்யுரஸாமஞ்சஸ்பாதிகரணத் தில் திருடபாசுபதமே மறுக்கப்பட்டது. வேதமுரண் ஆகா தனவாயகாமிகாதி சித்தாந்தசிவாகமங்கள் மறுக்கப்பட்டன அல்ல என்று உமாபதி சிவாசாரியார் உரைக்கின்ருர். எனவே இவரும் பிரமசூத்திரத்தை ஒப்புக்கொண்டவரே ஆனர். அது ஏகான்மவாத நூல் ஆயின் அதனை ஏற்றுக் கொண்ட உமாபதிசிவாசாரியார்மீது குற்றம்சொல்லநேரிடும்.

2. முதன் முதல் பேருரை கண்ட போதாயனரும் பின்னர் வந்த நீலகண்ட சிவாசாரியரும் அது ஏகான்மவாத நூல் என்பது உணராக்குற்றத்துக்கு ஆட்படுவர்.

3. சைவமகா புராண கைலாச சம்மிதையின் எட்டாவது அத்தியாயம் 'அதாதோப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா' என்று பிரம சூத்திரத்தேவரும் முதல்சூத்திரத்தை வழிபாட்டில் நாடோ றும் பயிற்சி செய்க என்று கட்டளை இடுகின்றது. ஓர் ஏகான்மவாத நூலைச் சைவநூல் போற்றுதல் தக்கதன்று எனல் வேண்டுமே.

4. வடமொழிக் கந்தபுராணசங்கரசம்மிதையின் தொடக்கத்தில் சிவனுர் ஆணைப்படி திருமால் வியாசராகப் பிறந்து

பிரமத்தை விதிக்கும் சூத்திரத்தைச்செய்தார் என்று கூறப்படுகின்றது. அது ஏகான்மவாத நூலாயின் அன்னணம் அதனைப் போற்றிக் கந்தபுராணம் கூறுமோ? கூருது செல்லும் என்றே அறிஞன்மார் கொள்வர்.

5. இனிப் பிரமசூத்திரமே (ச்ருதோபநிஷத் கத்யப தாநாச்ச) உபநிடதத்தை உணர்ந்தோர்க்குரிய கதி கூறப்படலான் என்று மொழிந்து செல்கிறது. இதனுல் தன்கூற்று உபநிடதநெறி எனலை விளக்குவதாயிற்று. பௌத்தமதமே மாயாவாதம் என்பதும் அதைத்தழுவிய சங்கரமதம் பிற்பட்டதே என்பதும் முன்பே காட்டினும்.

6. மாந்தர் பயிலுதற்கு உரிய வித்தை பதினன்களுள் பிரம சூத்திரமும் ஒன்று என்பது பண்டைய ஆசிரியன்மார் நெறி ஆகும்.

7. தூய அறிவு வாய்ந்த ஔவைப் பெருமாட்டியார் வேறுபாடு உணராமல் ஏகான்மவாத நூலைப் போற்றினர் என்ற குற்றத்துக்கு ஆட்படுவர்.

6. முடிவுரை :

இதுகாறும் கூறியவற்ருல்,

(அ) பௌத்த மதமே மாயாவாத நெறித்து என்பதும் அதைத் தழுவிப் பாடியம் செய்த சங்கரர் கொள்கை பிரம சூத்திர ஆசிரியர் கருத்தாகாது என்பதும்,

(ஆ) பழைய சுத்தாத்துவிதம் பகரும் உபநிடதநெறி கூறும் பிரமசூத்திரம் சிவநெறி நூலே என்பதும் அதனை ஏகான்ம வாதநூல் எனல் செல்லாது என்பதும்,

(இ) தேவர் குறளும் என்ற செய்யுளில் வரும் முனிமொழி என்பதற்குப் பிரமசூத்திரம் எனப் பொருள் கொள்ளல் தக்கதே என்பதும் அதனுல் சைவமதக் கொள்கைக்கு யாதொரு தாழ்வும் உண்டாகாது என்பதும் நன்கு நிறுவப்பட்டன. ஓம்.

திருவன்னியூர், திருக்கருவிலிக்கொட்டிட்டை தலச் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,

தஞ்சைமாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் அரிசிலாற்றின் வடகரையில் அமைந்து விளங்கும் திருத்தலங்கள் இவை. சோழவள நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 62, 63 ஆவது தலங்களாகத் திகழும் இவ்விருதலங்களும், அப்பர் சுவாமிகள் அருளிய திருக்குறுந்தொகைப் பதிகங்கள் ஒவ்வொன்றைப் பெற்றுள்ளனவாகும்.

1. திருவன்னியூர்

மாயூரம் – காரைக்குடி செல்லும் புகைவண்டித் தொடரில் பூந்தோட்டம் இரயில் நிலயத்திற்கு மேற்கே 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது இத்தலம். பூந்தோட்டம்-நாச்சியார்கோயில் பேருந்துச் சாலையில்வரும் பேருந்துகளில் ஏறி, திருவீழிமிழலையில் இறங்கி, வடக்கே 4 கிலோமீட்டர்தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். கும்பகோணம் - வடமட்டம் பேருந்தில் ஏறி வடமட்டத்தில் இறங்கி கிழக்கே 2 கிலோமீட்டர்தூரம் சென்றாலும் இத்தலத்தை அடையலாம். இத்தலத்தை அடையக் கற்சாலைவழி உள்ளது.

வன்னி - அனல். அக்கினிதேவன் வழிபட்டதால் இத்தலம் வன்னியூர் எனப்பட்டது. இறைவன் அக்கினிபுரீசுவரர் எனப்படுகிறார். தீர்த்தம் அக்கினி தீர்த்தம் எனப் பெயர்பெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்துள்ள அழகிய திருப்பணியால் கோயில் விளக்கமுற்றுத் திகழ்கிறது.

தலப் பெருமை :

திருநாவுக்கரசர் பாடியருளிய திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றைப்பெற்றுள்ளது. அக்னிதேவன் பூஜைசெய்து அருள்பெற்ற சிறப்புடையது. இத்தலத்தில் உள்ள தீர்த்தத்தில்நீராடி இறைவணை

வழிபடுவோர் இரத்தக்கொதிப்பு உஷ்ணரோகம் முதலிய நோய்கள் நீங்கி நலமுறுகின்றனர். உமையம்மை இறைவனைத் திருமணம் புரிந்துகொள்ளவேண்டித் தவம் புரிந்து தம் விருப்பம் நிறைவேறப் பெற்ற பெருமை உடையது

மூர்த்திகள் :

சுவாமிபெயர் அருள்மிகு அக்னிபுரீசுவரர். அக்னி பூசித்ததற்கு ஏற்ப ஒளிமயமான திருவுருவோடு அழகிய இலிங்கவடிவில் திகழ்கிறார். அம்பாள் பெயர் அருள்மிகு கௌரியம்மை. இறைவனது திருவடிவிற்கு ஏற்பப் பாலையாய் விளங்குகிறார். பஞ்சமூர்த்திகளில் சோமாஸ்கந்தர் திருவுருவம் மிக்க அழகுடையது. இத்தலத் திருப்பதிகத்தில் கூறிய வாறு ஆடல்வல்லான் தெய்விகக்கலையழகோடு காட்சி தருகின்றார். தலமரம் - வன்னி. தீர்த்தம் - அக்னிதீர்த்தம்.

கோயிலமைப்பு :

கோயில் சின்னஞ்சிறிய அழகிய இராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. எதிரே அக்னிதீர்த்தம் உள்ளது. ஒரே பிராகாரம். நந்தி பலிபீடங்களைக்கடந்து கோயிலை வலம் வரும்போது அக்னிமூலையில் தல விநாயகரைத் தரிசிக்கலாம். மேற்கே பால முருகன், வாயுமூலையில் மகாலக்ஷ்மி கோயில்களை வழிபடலாம். கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி விளங்குகிறார். தல ஐதிக வரலாற்றுச் சிற்பம் தென்புறச்சுவரில் உள்ளது. அப்பர் சுவாமிகள் வழிபட்டதும், அக்னிதேவன் பூசித்ததும், உமையம்மை பசு உருவாய் வழிபட்டதும் செதுக்கப்பட்டுள்ளன. மேற்கே இலிங்கோற்பவரும், வடக்கே பிர்மாவும் துர்க்கையும் உள்ளனர். சண்டேசுவரர்கோயில் தனியே உள்ளது.

வடக்குப்பிராகாரத்தில் தலமரம் வன்னி உள்ளது. வலமாகவந்து மூன்மண்டபத்தை அடையலாம். இங்கு, தலத்திருப்பதிகம் சலவைக் கல்லில் பொறித்துவைக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தில் தெற்கு நோக்கி விளங்கும் அம்பிகைகோயிலில் அம்பிகையைத் தரிசிக்கலாம்.

சுவாமிசந்நிதியில் துவாரவிநாயகரும் புடைப்புச்சிற்பங்களில் துவாரபாலகரும் உள்ளனர். பெருமான் ஒளிமயமான திருமேனியராய், நம் உள்ளத்தைக் கவர்கிறார். சுவாமிசந்நிதியில் பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்களையும் தரிசிக்கலாம்.

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே.

என்ற அப்பர்சுவாமிகள் திருப்பாடலை நாம் ஓதி வழிபட்டு, அம்பிகை சந்நிதியை அடைவோம். அம்மை சந்நிதியில் துவாரபாலகிகளின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அம்பிகை திருவுருவம் மிகச் சிறிய தாகவும் அழகியதாகவும் திகழ்வதைக் காணலாம்.

குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியல்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

என்ற திருப்பாடலை ஓதி வழிபடுவோம். மகாமண்டபத்தில் சமயா சாரியர் திருவுருவங்களும், பைரவர், சனிபகவான், சந்திரன், சூரியன் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. வழிபட்டு மனமகிழ்வோடு திரும்பலாம்.

புராண வரலாறு :

தக்கன் சிவபெருமானைப் புறக்கணித்துப் பெருவேள்வியொன்று செய்ததைக் கந்தபுராணத்தால் நாம் நன்கு அறியலாம். அவ்வேள்வி யில் அவிர்ப்பாகம் கொள்ளத் தேவர்கள் பலரும் சென்றனர். சிவபிரா னைப் புறக்கணித்துச்செய்வது வேள்வியாகாது என்று ததீசி முனிவர் அறிவுரைகூறியும் தக்கன் கேட்டிலன். வேள்வியைத்தொடங்கினுன். அக்னிதேவன் வேள்வியில் சொரியப்படும் அவியுணவை அவ்வத் தேவர்களுக்குத் தன்கையால் எடுத்தளித்துவந்தான்.

சிவபிரான் தக்கனுடைய யாகத்தை அழிக்கத் திருவுளம் கொண்டார். வீரபத்திரக்கடவுளைத் தோற்றுவித்தார். தக்கன் தம்மை யும் அவமதித்துச் சிவபிரானையும்பழித்துரைத்ததைக்கேட்ட அம்பிகை பத்திரகாளியைத் தோற்றுவித்தார். வீரபத்திரரும் பத்திரகாளியும் இறைவன் ஆணைப்படி தக்கயாகத்தை அழிக்கச்சென்றனர்; தக்கன் வேள்விக்குவந்திருந்த தேவர்கள் அனைவருக்கும் தக்க தண்டனைகளை அளித்தனர். அக்னிதேவனின் கைகளையும் ஏழு நாக்குகளையும் துண்டித்தார். அதுமுதல் அக்னிதேவன் இல்லாமல் வேள்விகள் தடைப்பட்டு உலகம் மழைவளம் குன்றி வருந்திற்று. அக்னிதேவன் தான்செய்த சிவாபராதம் நீங்கவும் இழந்த கையையும் நாவையும் பெறவும் இத்தலத்திற்குவந்து தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி நீராடிச் சிவலிங்கம்தாபித்து வன்னி இலைகளால் அர்ச்சித்துப் பல காலம் வழிபட்டுத் தவம் செய்திருந்தான்.

சிவபெருமான்தோன்றி அக்னிதேவனது பழிகளைப்போக்கி அருள் செய்தார். இழந்தகையையும் நாக்குகளையும் அருளினர். அக்னிக்கு

மேல்நோக்கிச்செல்லும் சக்தியைத்தந்து அக்னியைவழிபட்டு வேள்விகள் செய்யும் அன்பர்களுக்கு வேண்டுவன அளிக்கும் ஆற்றலையும் அளித்தார். சக்தி என்ற ஆயுதத்தையும் அளித்தார். அந்தணர்கள் அக்னியைவேண்டி வழிபட்டு யாகங்கள் செய்யத் தொடங்கினர். நாடு கலிநீங்கி நல்வளம்பெற்றது. அக்னிதேவன், தனக்கு அருள்புரிந்த அக்னீசுவரரை வணங்கி இத்தலத்திற்குவந்து அக்னிதீர்த்தத்தில் நீராடி வழிபடுவோர்க்குத் தன் தொடர்பான உஷ்ணரோகங்கள்பலவும் நீங்கவும் நற்கதிகள் பெறவும் அருள்புரியுமாறு இறைவனைவேண்டித் தன்னுலகம் சென்றான்.

காத்தியாயன முனிவரின் மகளாகத் தோன்றிய அம்பிகை இத்தலத்தில் இறைவனைத் திருமணம் புரிந்துகொள்ள வேண்டித் தவமிருந்து திருவீழிமிழலையில் தன் எண்ணம் ஈடேறப்பெற்றாள் என்பது வரலாறாதலின் திருமணமாகாதவர்கள், இத்தலத்து இறைவனையும் இறைவியையும் வழிபட்டுத் திருமணம் கைகூடப்பெறுகின்றனர்.

2. திருக்கருவிலிக்கொட்டிட்டை

இத்தலம் திருவீழிமிழலைக்கு மேற்கே 6. கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 10. கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பூந்தோட்டத்திலிருந்து நாச்சியார்கோயில் வழியே செல்லும் பேருந்துகளில் சென்று கூந்தலூரில் இறங்கி அரிசிலாற்றுப் பாலத்தைக் கடந்து வடக்கே 1 கி. மீட்டர் தூரம் சென்றால் இத் தலத்தை அடையலாம் கூந்தலூரில் பேருந்து நிற்குமிடத்தில் கருவிலி செல்லும் வழியையும் இத்தலப் பெருமையையும் குறித்த பெயர்ப்பலகை உள்ளது. * ஆடுதுறையிலிருந்து வடமட்டம்வரை பேருந்தில்வந்து பரவாக்கரை என்னும் ஊர் வழியாகத் தெற்கே 5 கிலோமீட்டர்தூரம் சென்றாலும் இத்தலத்துக்கு வரலாம். கருவிலி என்பது ஊர்ப்பெயர். கொட்டிட்டை என்பது கோயிற்பெயர். கருவிலி என்னும் பெயர் கருவேலி என்று மருவி வழங்கப்படுகிறது.

தலப்பெருமை :

திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந்தொகைப்பதிகம் ஒன்றைப் பெற்றுவிளங்குவது. தேவாரப்பாடல் பெற்ற காவிரித்தென்கரைத்

---

* கூந்தலூர் அரிசிலாற்றின் தென்கரையில் உள்ளது. இங்குள்ள திருக்கோயிலில் விளங்கும் முருகன்மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். வைப்புத்தலங்களுள் இதுவும் ஒன்று. க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் 9 ஆம் பாடல் காண்க.

தலங்களில் 63 ஆவது தலம். பிறவிப்பிணி தீரவேண்டிச் சற்குணன் என்ற மன்னன் வழிபட்டு அருள்பெற்றதலம். கருவிலி என்பதற்குப் பிறவிப்பிணிதீர்க்கும்பெருமான் உறையும் தலம் என்பது பொருளாம்.

பிணித்த நோய்ப்பிற விப்பிரி வெய்துமாறு
உணர்த்த லாமிது கேண்மின் உருத்திர
கணத்தி னுர் தொழு தேத்தும் கருவிலிக்
குணத்தி னுன்உறை கொட்டிட்டை சேர்மினே.

என்பது இத்தலத்தேவாரம் இந்திரன் முதலான தேவர்களும் உருத்திரகணத்தவர்களும் வழிபட்டு அருள்பெற்றசிறப்புடையது என்பதை இத்தலப்பதிகம் குறிக்கிறது. உலகமக்களை விளித்து அப்பர் அருளும் அரிய அறிவுரைகளைக் கொண்டுள்ளது இத்தலத்திருப்பதிகம்.

கோயில் மிகப் பழமையானது. சோழமன்னர்களும் பிறரும் செய்துள்ள கற்கோயில் என்பதை இங்குள்ள கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இத்தலத்தைச்சூழ மேற்கே நறையூர்ச்சித்தீச்சரமும், கிழக்கே திருவீழிமிழலையும், வடகிழக்கே திருவன்னியூரும் திருநல்லமும் உள்ளன.

கோயிலமைப்பு :

இத்தலத்திருக்கோயில் மிகப் பெரிதாக ஒருகாலத்தில் விளங்கி இன்று சுருங்கியநிலையில் காணப்படுகிறது. கிழக்கு நோக்கியசந்நிதி. அம்பிகையும் தனிக்கோயிலில் சுவாமிக்கு இடது பாகத்தில் கிழக்கு நோக்கி விளங்குகின்றார். வெளிப்பிராகாரம் முற்றிலும் பழுதடைந்து விட்டது. எதிரே எமதீர்த்தம் உள்ளது. வெளிப்பிராகாரத்தில் விளங்கிய நந்தி பலிபீடங்களைக் கடந்து கட்டைக்கோபுர வாயில் வழியாக முதற்பிராகாரத்தை அடைவோம். முதற்பிராகாரத்தில் சுவாமி சந்நிதியின் இருபுறமும் தனகணபதியும், பாலமுருகனும் விளங்குகின்றனர்.

திருக்கோயிலை வலம்வரும்போது கன்னிமூலையில் தலவிநாயகர் கோயில்மட்டுமே உள்ளது. முருகன் மகாலக்ஷ்மி கோயில்கள் இல்லை. கர்ப்பக்கிருகம் சீர்திருத்தம் செய்யப்பட்டு வானளாவ உயர்ந்து விளங்குகிறது

வலமாகவந்து சுவாமி சந்நிதியை அடைவோம். மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், அர்த்த மண்டபங்கள் திருத்தம் செய்யப்பட்டு அழகுற விளங்குகின்றன. ஸ்நபனமண்டபத்தில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. சுவாமி சந்நிதியில் துவாரவிநாயகர், துவாரபாலகர்கள் உள்ளனர். விக்ரகங்கள் பழுதடைந்துள்ளன.

சுவாமி அருள்மிகு சற்குணநாதேசுவரர். பெரிய சிவலிங்கத் திருவுருவில் காட்சிதருகிருர்.

மட்டிட்ட குழலார் சுழலில்வலைப்
பட்டிட்டு மயங்கிப் பரியாதுநீர்
கட்டிட்ட வினைபோகக் கருவிலிக்
கொட்டிட்டையுறைவான் கழல் சூடுமே.

என்று அப்பர் சுவாமிகள் அருளிய தேவாரப்பாடலை ஓதி வழிபட்டு மீள்வோம். பஞ்சமூர்த்திகள் மற்றும் உற்சவவிக்ரகங்கள் அனைத்தும் பாதுகாப்புக்காக வேறு கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன.

சுவாமி திருக்கோயில் கோஷ்டங்களில் தெற்கே அர்த்தநாரீசுரர், தக்ஷிணுமூர்த்தி, வடக்கே பிர்மா, துர்க்கை, பைரவர் திருவுருவங்கள் தரிசிக்கத்தக்கவை. வடக்குப்பிராகாரத்தில் சண்டேசுவரர் கோயில் தனியே உள்ளது.

வடக்குப்பிராகாரத்தில் உள்ள திருவாயில் வழியாக அம்பாள் கோயிலை அடைவோம். அம்பிகை தனிக்கோயிலில் விளங்குகிருள். மிகப் பெரிய திருவுருவம். பிராகாரம் பழுதடைந்துள்ளது. கர்ப்பக் கிருகம் சுவாமிகோயில் விமான அமைப்பில் திருத்தம்செய்யப்பட்டு உயர்ந்து காணப்படுகிறது. விமான கலசம் இல்லை.

அம்பாள் சந்நிதியின் முன்மண்டபத்தை அடைவோம். வாயிலில் விநாயகர் விளங்குகின்ருர். அம்பிகை அருள்மிகு சர்வாங்கநாயகி புருஷ ஆகிருதியோடு விளங்குகிருள். அழகிய திருவுருவம்.

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான் இடஞ் சேர்பவளே.

என்ற பாடலை ஓதி வழிபடுவோம் அம்மன்கோயில் மண்டபத்தில் மகாபலிசக்ரவர்த்தி உருவம், தேவாரம் அருளிய மூவர் திருவுருவங்கள், முருகன், பைரவர், சூரியன் திருவுருவங்கள் உள்ளன. அம்பாள் திருக்கோயிலின்வாயில் இடிந்துள்ளது தேவாரப் பாடல்பெற்ற சிறந்த இத்தலம் பழுதடைந்துள்ளதுகண்டு நம்மனம் பதைப்புறுகிறது. இக் கோயிலின் திருப்பணிகள் விரைவில் நிறைவேறிப் புதுமைத் திருக் கோலம் கொள்ள இறைவனை வேண்டி வழிபட்டு மீள்வோம்.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு சற்குணநாதேசுவரர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு சர்வாங்கநாயகி. இக்கோயிலிலுள்ள நர்த்தன விநாயகர், அர்த்தநாரீசுவரர், தக்ஷிணாமூர்த்தி, பைரவர், முருகன் திருவுருவங்கள் பழமையும் கலைச்சிறப்பும் உடையவை. இத் தலத்துச் சுவாமி அம்பாள் விமானங்கள் தனி அமைப்பையும் அழகையும் உடையனவாய் விளங்குகின்றன.

கல்வெட்டுக்கள் :

இரண்டாம் இராசாதிராசன் காலத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூரை உய்யக்கொண்டார்வளநாட்டுவெண்ணாட்டுக் குலோத்துங்கசோழ நல்லூராகிய கருவிலிக்கொட்டிட்டை என்று குறிக்கிறது.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

சிந்தித்து இமையவர் தினந்தொழு மாகறல்
திரிபுவன நாயகியம்மை
திரிபுர மெரித்தசிவ னுறைதிரு வோத்தூர்
சேருமிள முலைநாயகி
வந்தவினை நீக்கும்வன் பார்த்தான் பனங்காட்டூர்
வாழமுதம் அமிர்தவல்லி
வளமோங்கு திருவல்லம் வல்லாம் பிகைதிரு
மாற்பேறு அஞ்சனாட்சி
எந்தைபிரா னுறையும் ஊறலுமை யம்மைதிரு
இலம்பையங் கோட்டூரினில்
இணையிலாக் கோடேந்து முலையம்மை விற்கோலம்
எழில்திரி புராந்தகியம்மை
பந்தித்த பழவினை யகற்றிடும் பாவையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின் மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (32)

செய்திகள்

ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 14—7—80 அன்று திருவீழிமிழலை ஸ்ரீ வீழிநாதர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஆதீன ஓதுவாமூர்த்திகள் தலத் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்தனர். ஆயில்ய விழா வெளியீடாக அச்சிடப்பெற்ற தலப்பதிக நூல் அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஸ்ரீமாணிக்க வாசக சுவாமிகள் குருபூஜை விழா 15—7—80 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலை ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. பின்னர் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும் ஓதுவாமூர்த்திகளும் ஸ்ரீ மாணிக்கவாசகர் சரிதம் காட்டும் பரஞ்சோதி திருவிளையாடற் புராணப் பகுதிகளைப் பாராயணம் செய்தனர். இரவு 7 மணி அளவில் வித்துவான் திரு. வி. சா குருசாமி தேசிகர் எம். ஏ., "திருவாசகம்" என்னும் பொருள் பற்றியும், புலவர் திரு. மு. சிவச்சந்திரன் எம்.ஏ., "திருக்கோவையார்" என்னும் தலைப்பிலும் உரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றியபின்னர் ஆதீன ஓதுவாமூர்த்திகளின் திருவாசக பாராயணத்துடன் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவீதியுலாக் காட்சி சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் பலர் தரிசித்தும் கேட்டும் பயன்பெற்றனர்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா 21—7—80 அன்று சிறப்பாக நடைபெற்றது. காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பின்னர், சுந்தரர் அருள்வரலாற்றுத் தொடர்புடைய பெரியபுராணப்

பகுதிகள் படிக்கப்பெற்றன. திருத்தொண்டத்தொகை பாராயணம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். இரவு ஸ்ரீ சுந்தரர், ஸ்ரீ சேரமான்பெருமாள் நாயனார் திருவீதியுலா நிகழ்வுற்றது. திருவீதியுலாவில் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவு ஆற்றினர். வேத பாராயணத்துடனும், திருமுறைப் பாராயணத்துடனும் திருவீதியுலாச் சிறப்பாக நிகழ்வுற்றது. அன்பர்கள் பலர் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

ஏகதின லக்ஷார்ச்சனை

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காபரமேசுவரிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் உலகநலங்கருதி ஆடி வெள்ளிக்கிழமைகளில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நவசக்தி அர்ச்சனைகளும் நடைபெறுகின்றன. மூன்றாவது வெள்ளி 1—8—80 அன்று ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. காலையிலும் மாலையிலுமாக அன்பர்கள் வந்து வழிபட்டு அன்னையின் அருள் பெற்றனர்.

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

நாயன்மார்கள் குருபூஜை

ஏயர்கோன்கலிக்காம நாயனார், பெருமிழலைக்குறும்ப நாயனார், கழறிற்றறிவார் நாயனார், கலிய நாயனார், கோட்புலி நாயனார் ஆகிய நாயன்மார்களின் குருபூஜைகள் 5—7—80, 20—7—80, 21—7—80, 24—7—80 தேதிகளில் மாலை 6-30 மணிக்கு நிலைய பூஜைமடத்தில் நடைபெற்றது. பேராசிரியர் திரு ஏ. அய்யாசாமி அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினார்கள். நிலைய அன்பர்களும் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் கேட்டுப் பயன் பெற்றனர்

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 9—7—80 புதன்கிழமை மாலை 7-00 மணிக்கு நிலையத்தில் திரு. குருஜி ஜி. கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிபடத்திற்கு அர்ச்சனை

செய்தபிறகு திரு. என். இராமலிங்கம், திரு. சபாரத்தின தேசிகர், திரு. என். இராமமூர்த்தி அய்பர், குமாரி R. கௌரி ஆகியோர் வேளூர்ப்பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினார்கள்.

தவத்திரு நிலையசுவாமிகளின் வரவேற்புரைக்குப் பிறகு விழாத் தலைவர் திரு. குருஜி ஜி. கண்ணன் அவர்கள் தமது உரையில் இன்று பிரதோஷநாள், இதன் மகிமையை உணர்ந்து ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளைப்பெற மக்கள் என்னசெய்யவேண்டும் என்று சிந்திக்கலாம். ஏகாதசி திதியில் சிவபெருமானைத் தேவர்கள் நஞ்சுண்ணச் செய்தனர். அதனால் அன்று முழுவதும் அவர்கள் பட்டினி இருந்து துவாதசியில் பாரணம்செய்தனர். திரயோதசியில் பகல் இறுதி 3¾ நாழிகை தொடங்கிச் சிவபெருமான் தான் நஞ்சு உண்டதனால் தீங்கு எதனையும் எய்தவில்லையென்று தேவிக்கு உணர்த்த ஒரு சாமநேரம் சூலத்தைச் சுழற்றிக்கொண்டு வீரநடனம் புரிந்தார். அதனைத் தேவர்களும் தரிசித்து நஞ்சு உண்பித்த குற்றத்தினின்றும் நீங்கினர். உயிர்கள் அறிந்தும் அறியாமலும்செய்த தவறுகளுக்காகப் பிரதோஷ தரிசனம்செய்தல் நலம்பயப்பதாகும். கிருத்திகைதோறும் விரதமிருந்து கந்தனின் கழல் அடிகளைப்பரவினால், இப்பூவுலகவாழ்வு மட்டுமன்றி மேலுலக வாழ்வும் சிறக்கும் என்று கூறினார். பின்னர் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழா

இவ்விழா 15—7—80 செவ்வாய்க்கிழமை மாலை திரு. டி. எஸ். பக்தவத்சல முதலியார் அவர்கள் உபயமாக நடைபெற்றது. தவத்திரு நிலைய சுவாமிகள் வரவேற்புரை கூற விழாத்தலைவர் திரு. சுகி சிவம் பி. ஏ. பி. எல். அவர்கள் தமது தலைமையுரையில் மனிதன் தன் குறைகளை - தவறுகளை உணர்ந்து இனிச் செய்ய மாட்டேன் என்று உறுதி பூண்டு ஆண்டவனிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும். 'அழுதால்' ஆண்டவனின் அருளைப்பெற்று உய்யலாம்; அதனால்தான் மணிவாசகர் "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று கூறினார். பரமஹம்சர், விவேகாநந்தரின் சிரசில் தன் கையை வைத்துத் தீக்ஷை செய்து முழு அருளையும் அவருக்குப் பாய்ச்சினார். குருவருள் நிரம்பப்பெற்ற காரணத்தால் விவேகாநந்தர் குவலயம் போற்ற வாழ்ந்தார்; திருவாசகத்தை ஒவ்வொருவரும் பொருள் உணர்ந்து ஓதி உள்ளம் உருகும் நிலையைப் பெற வேண்டியது தமிழனின் தலையாய கடமையாகும் என்ற கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

தவத்திரு நிலைய சுவாமிகள் நன்றியுரைக்குப் பின்னர் கூட்டம் இனிது நிறைவுற்றது.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

இவ்விழா 21—7—80 திங்கள் மாலை திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்களின் உபயமாக நிலையத்தில் நடைபெற்றது. ஸ்ரீ கயிலாயத் திருவுருவப்படத்திற்கு அர்ச்சனை செய்த பின்னர் திருமுறைப்பாராயணம் நிகழ்ந்தது. Dr. V. ரத்தினசபாபதி அவர்கள் பேருரை ஆற்றினார்கள். அதில் நால்வர் வணக்கத்தில் சுந்தரரைப் பற்றி "வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி" என்று சிறப்பிக்கப்படுகிறது. அவதாரம் செய்த நாவலூர் என்ற ஊரையும் பாராட்டும் சிறப்பைக் காணலாம். வன்றொண்டன் என்ற சிறப்புப் பெயரையும் தம்பிரான்தோழர் என்ற சிறப்புப் பெயரையும் சுந்தரர் பெற்றார். கடுமையான தொண்டுகள் செய்து கருணைக்கடலுக்கு ஆளாகி வெள்ளையானையின்மேல் அமர்ந்து திருக்கயிலைசென்று அருள் பெற்றார். அந்நிகழ்ச்சியால் பரம்பொருள் பித்தனே என்ற உண்மை நிலைநாட்டப்பெறுகிறது. பித்தன் என்ற சொல் இறைவன் எல்லா உயிர்களும் உய்யவேண்டும் என்ற எண்ணத்திலேயே பித்துப்பிடித் திருக்கிறான் என்பதை உணர்த்துகிறது எனக் குறிப்பிட்டார்கள். நன்றியுரைக்குப் பின்னர் கூட்டம் இனிது நிறைவுற்றது.

மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

இம்மாத சமயப் பிரசார வழிபாடு 27—7—80 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-30 மணி முதல் 8-30 மணி வரை சென்னை திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடை பெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. ஏனைய மூர்த்திகளுக்கும் அர்ச்சனைசெய்யப்பட்டது. வழிபாட்டிற்குப் பின்னர் சமயச் சொற்பொழிவு நடந்தது. நிலையத்து அன்பர் D. S. P. திரு P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் எல்லோ ரையும் வரவேற்றுப் பேசுகையில் இன்று பௌர்ணமிதினம் இந்தத் தினத்தில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளை முறையாக வழிபாடுசெய்து மனத்தூய்மை பெற்றால் செம்மையே ஆய சிவபதத்தை அடைந்து உயிர்கள் உய்திபெறும் நிலையை அடையும். பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெருமாட்டியின் திருவடியே சரணம் என்று உயிர்கள் எண்ணி வழிபட்டால் அவள் தானேவந்து அருள்பாலிப்பாள். இந்தப் பெருநிலையை இவ்வூர்வாசிகள் பெற்று இன்புறுவதற்காகச் சென்னை தருமையாதீனப் பிரசார நிலைய அன்பர்கள் ஒன்றுசேர்ந்து சிறந்த முறையில் அபிஷேக அர்ச்சனைசெய்து பிரசாதம் விநியோகம் செய்கிறார்கள். இவ்வழிபாட்டைக்கண்டு அன்னை ஸ்ரீ திரிபுரசுந்தரி அகமகிழ்ந்து அருள்மழை பொழியச்செய்திருக்கிறாள் என்று கூறித் தேவியின் சிறப்பை விளக்கினார்கள். பின்னர், பேராசிரியர் திரு. ஏ. அய்யாசாமி எம். ஏ. அவர்கள் அபிராமி அந்தாதியின் 61 ஆவது பாடலை விளக்கிப்பேசினார்கள்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரி ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய.

(17—8—80 முதல் 16—9—80 முடிய)

ஸ்ரீ ரௌத்திரி ஆடிமீ 32உ ஸ்திரவாரம் சித்திரை நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 37-நாழிகை 4-விநாடிக்கு மீன லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கடக ராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணி மாதப் பிரவேசம் செய்தருளுகிறார். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். மறுதினம் பாநுவாரம் ஆவணிமீ முதல்தேதியாகிறது. சேனாதிபதி சனிபகவான் ஆகிறார். சங்கிரமகால கிரகஸ்திதியால் நாடுகளில் எங்கும் நீர்வளம் மிகுந்து உணவுப்பயிர்கள் செழிக்கும். உலகின் தென்மேற்கு நாடுகளில் யுத்தத்தால் மிகுந்தசேதம் ஏற்படும். ஆசியாவின் தெற்கு தென்கிழக்கு நாடுகளில் பூகம்பம், நிலச்சரிவு, ஜலப்பிரவாகம் ஆகிய இயற்கைசீற்றங்களால் ஜனங்களுக்குக் கஷ்டம் பொருள்சேதம் ஏற்படுதல் ஆகும். சர்வேஸ்வரர் அருளால் ஆன்றோர்களின் முயற்சியில் நாடுகளில் சமரசநிலைமைஏற்படும். பிரஜைகள் நிவாரணம்பெறுவர். தேசங்களில் இறைவர் தூதுவர்களாக வந்துள்ள ஜனப்பிரதிநிதிகள், ஜனாதிபதிகள், மந்திரிகள் பிரஜைகளை இரட்சிப்பார்கள். பிரஜைகள் உணவு உடை, இருப்பிடவசதி, பொருளீட்டும் தொழில் ஆகிய நன்மைகள் வாய்க்கப்பெற்று க்ஷேமமுறுவர்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பிரமஞானபதியாக திருவீற்றுள்ள சிவஞானகுருமகான்கள் லோகமாந்தர்களுக்கு சிவாசார நியமத்தின் உயர்வை எடுத்தியம்பி, அவ்வழி அனுஷ்டிக்க ஆசி அருள்வார்கள் அன்னார் திருவுளப்பாங்கின்படி லோகத்தில் சிவபுண்ணிய காரியங்கள் நடந்துகொண்டிருக்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்திய ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெறும். லோக பிரஜைகள் தெய்வ பக்தியுடன் திரிகரண சுத்தம் உடையவர்களாகிச் செவ்வையாக வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - வி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் மதிப்பாக பணவருமானம் வந்துசேரும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். அதிருப்தி நீங்கும். கட்டிடம், வாகனம் இவற்றின் பிராப்தியில் நல்ல வசதியைத்தரும். 17உக்கு வித்துவத்துவத்தில் ஓர் நல்ல ஸ்திதி ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு சல்லாபம் ஏற்படும். வழக்கு விவகாரத்தில் சாதகம் உண்டாகும். தார புத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆவணிமீ 3. 4, 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தாராளமாக பணச்செலாவணி இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் விசேஷ பலனைத்தரும். வீடு புதுப்பித்தல் நவீன பொருள்வாங்குதல் ஆகும். இல்லத்தில் சுபகாரியம் நடக்கும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆவணிமீ 5உ 1 - நாழிகை 24 - விஞடி முதல் 7உ 18 - நாழிகை 26 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் நற்பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு ஓர் உயர்வு ஏற்படும். இயந்திரம் வாகனங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். வித்தியாவியாபாராதிகலைத்துறைகளில் முன்னேற்றம்தரும். அரசாங்க கடிதத் தொடர்பில் 17உக்கு நன்மை ஏற்படும். தாரசௌக்கியம், புத்திரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆவணிமீ 7 உ 18 - நாழிகை 26விஞடி முதல் 9உ 30 - நாழிகை 4 - விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் நல்லவிதமாக வரவாகிக்கொண்டிருக்கும். சகோதரர்

நல்ல ஸ்திதியில் இருந்துவருவர். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம்தரும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும் அரசாங்கக் கடிதத்தொடர்பு கொண்ட விஷயங்களில் அனுகூலம் ஏற்பட்டுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆவணிமீ 9உ 30 - நாழிகை 4 - வினாடி முதல் 11உ 37 - நாழிகை 50 - விநாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் கெடியாக வரவாகிக்கொண்டிருக்கும். அதற்கேற்றபடி செலவும் ஆகும். சகோதரர் மேன்மை ஸ்திதியில் இருந்துவருவர். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் 17உ முதல் நன்மைகள் ஏற்பட்டுவரும். சனிக்கிழமை சனீஸ்வர சகஸ்ரநாம அருச்சனைசெய்ய அல்லல்நீங்கும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். ஆவணிமீ 11உ 37 - நாழிகை 50 - விநாடி முதல் 13உ 43 - நாழிகை 45 - விநாடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் மாதமுன் பகுதியைவிட, பின்பகுதியில் கணிசமாக பண வருமானம்வரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நல்லன ஏற்படும். சிலசந்தர்ப்பங்களில் மனோவேகம்வரும். உடன் தணியும். உறுதிப்பாடாக நல்லகாரியங்களை நடத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். இராசிக்குப் பித்தமயக்கம்வந்து உடன் குணமாகும். ஆவணிமீ 13உ 43 நாழிகை 45 விநாடி முதல் 15உ 50 நாழிகை 14 விநாடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் ஒப்பந்த லேவாதேவிகள் மூலம் கணிசமாக வரும். சகோதரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பூர்வசொத்

துக்களினின்றும் நற்பலன் வரும். அரசாங்கத்தொடர்புள்ள காரியங்கள் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருக்கும். ஓர் ஸ்தல யாத்திரை சென்று வருதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஆவணிமீ 15உ 50 நாழிகை 14 விஞடிமுதல் 17உ 59 நாழிகை 26 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

8. விருச்சிகம் :– விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9-பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரரின் தொழில் துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். கட்டிடம்வாடகை இவற்றின் பிராப்தியில் நல்ல சௌகரியம்தரும். ஜீவனோபாயத் தொழில்கள் பிரசித்தமாக நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆவணிமீ 17உ 59 - நாழிகை 26 விஞடி முதல் 20உ 13 - நாழிகை 13 - விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு :– மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9-பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் சீராக இருந்துவரும். சகோதரர்களுக்கு நல்லன ஏற்படும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். தாமதமாக உள்ள எல்லாக்காரியங்களும் 17உ முதல் துரிதமாக நடக்கும் புத்திரருக்கு மேலிடத்தில்நன்மையும் மேன்மை ஸ்திதியும் ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமூகம்நிலவும். ஆவணிமீ 20உ 13-நாழிகை 13 விஞடி முதல் 22உ 32-நாழிகை 59-விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம் :– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9-பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் முயற்சித்த வகையில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வித்யா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம்தரும். எல்லாக்காரியங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆவணிமீ 22உ 32 - நாழிகை 59-விஞடிமுதல் 24உ 58-நாழிகை 42 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு, கே. - கோ. ஸ. ஷி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். முயற்சித்தகாரியத்தில் காலதாமதமாயினும் நன்மையே உண்டு பண்ணும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலஸ்தர்களால் ஓர் நன்மை ஏற்படும் பிதாவின் நலம் பாதித்து உடன் குணமாகும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆவணிமீ 24உ 58 நாழிகை 42 விநாடி முதல் 27உ 27 நாழிகை 41 விநாடிவரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼- உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானத்தில் சிக்கலாக இருப்பினும் பின் வரவு ஆகும். முன்புள்ள இருணங்கள் தீரும். ஒப்பந்தலேவாதேவியில் நல்லன ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்லநிலைமையை ஏற்படுத்தும். மனைவிக்கு வாயு பீடித நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆவணி மாசம் 27உ 27 நாழிகை 41 விநாடி முதல் 29உ 55 நாழிகை 55 விநாடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

திருவாசகம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

— மாணிக்கவாசகர்.

ஆவணிமாதச் சிறப்பு நாட்கள்

19—8—80	செவ்வாய். தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும், ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்சராபிஷேகம். தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா முதல்நாள்.
20—8—80	புதன், கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா இரண்டாம்நாள்.
21—8—80	வியாழன். ஆவணிமூலம். தருமையாதீன பூஜைமடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை. மாலை பட்டமளிப்பு விழா. தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா நிறைவு நாள். வேளூரில் பஞ்சமூர்த்திகள் அபிஷேகம், புறப்பாடு. திருவையாறு சூர்யபுஷ்கரணியில் தீர்த்தம். ஷை சூர்யபுஷ்கரணியில் தெப்பம். குங்குலியக்கலய நாயனார் குருபூஜை.
22—8—80	வெள்ளி, வரலக்ஷ்மி விரதம்.
23—8—80	சனி, மகாப்பிரதோஷம்.
24—8—80	ஞாயிறு, ஓணம் பண்டிகை. ருக் உபாகர்மா. ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். ஆவணிமூல உற்சவ பூர்த்தி.
25—8—80	திங்கள், பௌர்ணமி விரதபூஜை. மாதபூஜையில் சர்க்கரை
26—8—80	செவ்வாய், காயத்திரிஜபம். [அபிஷேகம். யஜுருபாகர்மா.
29—8—80	வெள்ளி, திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி சம்வத்சர அபிஷேகம். சங்கடஹரசதுர்த்தி
1—9—80	திங்கள், கிருத்திகைவிரதம். தருமை ஸ்ரீசண்முகர்கிருத்திகை அபிஷேகம். வேளூர்க் கிருத்திகை. காளாஷ்டமி. ஸ்ரீஜயந்தி. கோகுலாஷ்டமி.
3—9—80	புதன், மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி சம்வத்சராபிஷேகம். தருமையாதீனம் 14 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.
4—9—80	வியாழன், திருவலஞ்சுழி விநாயகர் உற்சவாரம்பம். தருமையாதீனம் 13 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.
5—9—80	வெள்ளி, திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி சம்வத்சராபிஷேகம்.
6—9—80	சனி, மகாப்பிரதோஷம். செருத்துணை நாயனார் குருபூஜை.
7—9—80	ஞாயிறு, மாதசிவராத்திரி. ஆயில்ய விழா. புகழ்த்துணை நாயனார், அதிபத்த நாயனார் குருபூஜை.
8—9—80	திங்கள், போதாயன அமாவாசை. இளையான்குடிமாறநாயனார்
9—9—80	செவ்வாய், அமாவாசை, தர்ப்பசங்கிரகணம். [குருபூஜை.
10—9—80	புதன், ஸ்ரீ மறைஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை. மடப்புறம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள் குருபூஜை.
11—9—80	வியாழன், தருமையாதீனம் 5 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்ததேசிகபரமாசாரியசுவாமிகள்குருபூஜை.
13—9—80	சனி, விநாயகசதுர்த்தி.
14—9—80	ஞாயிறு, ரிஷிபஞ்சமி.
15—9—80	திங்கள், குலச்சிறை நாயனார் குருபூஜை.
16—9—80	செவ்வாய், ஷடசீதி புண்யகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ முனிசுவரபூஜை.

GNANASAMBANDAM Regd. No Tn/NM2



ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜைமடத்தின் விமானம்

தருமையில்

ஆவணிமூலப் பெருவிழா

தருமையாதீன மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு ஆவணிமூலப் பெருவிழா 15—8—80 வெள்ளிக்கிழ மை முதல் தொடங்கி நடைபெறும். ஆவணிமூல நன்னுளையொட் டி, தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா 19, 20, 21—8—80 ஆகிய மூன்று நாட்களிலும் நிகழும். நாள்தோறும் அறிஞர்கள் ரின் தோத்திர - சாத்திர புராணங்களைப் பற்றிய சொற்பொழிவுகளும், கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழும். 21—8—80 ஆவணிமூலத்தன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு வி சேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழும். மாலை ஸ்ரீசொக்கநா ர் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், திருச்சி டாக்டர். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்குச் "செந்தமிழ்க் காவலர்" என்ற பட்ட ம் அளித்து ஆசி வழங்குவார்கள்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Pre ss. Dharmapuram Mayuram 10—8—80